REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜூன் 20 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 143 | Monday 20, June, 2022 | 12பக்கங்கள் | 40/-

ஜனாதிபதி கோட்டாபயவின் பிறந்த தினம் இன்று

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி விசேட மத அனுஷ்டானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு பிறந்த நாள் நிகழ்வை எளிமையாக நடத்த 08

நல்லுறவை சீர்குலைக்க சிலரது திட்டமிட்ட செயல்;

படையினர் பொதுமக்களிடையே முறுகலை ஏற்படுத்த முயற்சி

விசுவமடு சம்பவம் குறித்து இராணுவம் விளக்கம்

விசுவமடுவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற சம்பவம், பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் சீர்குலைக்க சில சந்தேக நபர்களின் திட்டமிட்ட முயற்சி என இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் மூன்று இராணுவ வீரர்கள் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக 08

அரச உத்தரவாத விலைக்கே இனி அரிசி வழங்க நடவடிக்கை

அரிசி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் டட்லி

தாம் உட்பட அனைத்து அரிசி உற்பத்தியாளர்களும் நேற்று (19) முதல் அரசாங்க உத்தரவாத விலையில் சந்தைக்கு அரிசியை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அரலிய அரிசி நிறுவனத்தின் தலைவர் டட்லி சிறிசேன தெரிவித்தார்.

அதனடிப்படையில் எத்தகைய பிரச்சினை இருந்தாலும் அரசாங்க கட்டுப்பாட்டு விலையில் அரிசியை சந்தைக்கு விடுவிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஏனைய அரிசி வியாபாரிகளும் இதே விலையில் அரிசியை 08

பொருளாதார, அரசியல் நெருக்கடி நிலை;

இலங்கை விடயத்தில் தெளிவான நிலையில் இந்திய பிரதமர்

மோடியின் நிலைப்பாடு குறித்து ஜெய்சங்கர் விளக்கம்

அயல் நாடான இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினை போக்கும் நடவடிக்கையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெளிவான தன்மையினை கொண்டுள்ளதாக, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். 08

வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் படி

வாரத்திற்கு இரு தடவைகள் வாகனங்களுக்கு எரிபொருள்

அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாக அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

- இ.போ.ச பஸ்கள், அத்தியாவசிய துறைகள் தவிர்ந்த வாகனங்களுக்கு புதிய கூப்பன் முறைக்கு அரசு நடவடிக்கை
- அடுத்த 3 தினங்களுக்கு எரிபொருள் விநியோகம் இல்லை. 23 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகும்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்படும் துறைகள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின்படி வாரத்திற்கு இரு முறை எரிபொருள் வழங்கும் முறைமையொன்றை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து பஸ்கள், பாடசாலை சேவைகள், தனியார் ஊழியர்களின் போக்குவரத்து சேவைகள் மற்றும் சுற்றுலா சேவைகள் ஆகியவற்றுக்கும் இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் ஊடாக எரிபொருள் வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தொழில்முறை முச்சக்கர வண்டிகளுக்கு நாளாந்தம் எரிபொருளை வழங்கும் முறைமை உருவாக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் 08

சர்வதேச அமைப்புகளுடன் வெளிப்படை தன்மையுடன் இலங்கை செயற்படுகிறது

பச்லெட்டிடம் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

மனித உரிமைகள் பேரவையின் 50வது அமர்வின் பக்க அம்சமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் நாயகம் மற்றும் சீனா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, கொரியக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதிகளை சந்தித்தார்.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் திருமதி மிச்செல் பச்லெட் உடனான சந்திப்பின் போது, மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அமைப்புடன் இலங்கை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்படுவதாக உயர்ஸ்தானிகருக்கு உறுதியளித்தார். 08

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்;

எல்லை மீறும் பொலிஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

03

ஓமானிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்ய நடவடிக்கை

இறக்குமதிக்கான ஒப்பந்தம் நாளை கைச்சாத்து

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டிற்கு எதிர்வரும் நான்கு மாத காலத்திற்காக ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்து நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. 08

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவில்

சட்டவிரோதமாக குடியேற முயன்ற 41 பேர் நாடு கடத்தல்

நாடு திரும்பிய 37பேருக்கு பிணை கிடைத்தது

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சித்த 41 இலங்கையர்கள், அந்நாட்டு கடலோரக் காவல்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்கள் கிறிஸ்மஸ் தீவில் இருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர். நீர்கொழும்பு, முல்லைத்தீவு, சிலாபம், உடப்பு, தொடுவாவ மற்றும் மாரவில ஆகிய பகுதிகளில் 08

IMF ஐ முன்கூட்டியே நாடியிருக்க வேண்டும்

மிகப்பெரிய தவறு என்கிறார் ஆளுநர்

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அவசரமாக வழமைக்கு திருப்ப முடியாது என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை முன்கூட்டியே சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்க வேண்டும். அவ்வாறு நாடியிருந்தால் 08

அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே Gas விநியோகம்

லிட்ரோ நிறுவனம் நேற்று அறிவிப்பு

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிவாயு விநியோகத்தையும் மட்டுப்படுத்தியுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

வீட்டு சமையல் எரிவாயு விநியோகமானது தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவன பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிவாயு விநியோகம் நேற்று (19) முதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக 08

பம்பலப்பிட்டியில் சட்டவிரோத செயற்பாடு;

பவுஸரிலிருந்து காருக்கு எரிபொருள் விநியோகம்

தீவிர விசாரணை நடைபெறுகிறது

எரிபொருளை ஏற்றிச் செல்லும் பவுஸர்களிலிருந்து சட்டவிரோதமாக எரிபொருளை இறக்கியமை தொடர்பில் சமூக ஊடகங்களில் பதிவாகியுள்ள மூன்று சம்பவங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, சிபெட்கோ மற்றும் லங்கா ஐஓசி ஆகிய மூன்று பவுஸர்களின் அனுமதிப்பத்திரங்கள் விசாரணைகள் முடியும் வரை உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். 08

எரிபொருள் விநியோகத்தை தாமதப்படுத்திய காகம்

பண்டாரகம பகுதியில் சம்பவம் பதிவு

காகத்தினால் எரிபொருள் விநியோகம் தடைப்பட்ட சம்பவமொன்று பண்டாரகம பகுதியில் பதிவாகியுள்ளது.

ஐந்து நாட்களுக்குப் பின்னர் கடந்த சனிக்கிழமை (18) பிற்பகல் பண்டாரகம கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு ஒரு தொகை பெற்றோல் கிடைத்துள்ளது. எரிபொருளைப் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வரிசையில் 08

இன்று முதல் பஸ்கள் சேவை 50 வீதத்தால் அதிகரிப்பு

பஸ் சங்க தலைவர் கெமுனு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஐம்பது வீதமான தனியார் பஸ்களை இன்று முதல் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இன்று முதல் நாடளாவிய ரீதியில் 10,000 ற்கும் அதிகமான தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு 08

உலமா சபை தலைவராக மீண்டும் ரிஸ்வி முப்தி

மத்திய சபை கூட்டத்தில் தெரிவு

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புதிய தலைவராக அஷ்ஷைக் முப்தி எம்.ஐ.எம் ரிஸ்வி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். 08

ஜனாதிபதியுடன் ஆளுந்தரப்பு இன்று முக்கிய சந்திப்பு

03

கொழும்பு கல்வி வலயம் மற்றும் நகர்ப்புற பாடசாலைகள் ஒரு வாரத்திற்கு மூட்டு

ஒன்லைன் மூலமான கல்வியை தொடர ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

03

இணையவழிக் கல்வி வெற்றியளிக்கவில்லை

Online முறைக்கு ஸ்டாலின் கவலை

எந்தவொரு பிரச்சினைகளின் போதும், அதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காது பாடசாலைகளையே மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடகங்களுக்கு இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். 08

பல பிரச்சினைகளுக்கு பிரதமரினால் தீர்வு

UNP தவிசாளர் வஜிர தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உரப் பிரச்சினை இதுவரை வெற்றிகரமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் 08

தேங்காய் விலை 200 ரூபா வரை உயரலாம்

தவிர்க்க முடியாதுள்ளதாக தெரிவிப்பு

தேங்காய் உற்பத்திச் செலவை சமாளிக்கும் வகையில் தேங்காய் ஒன்றின் விலையை ரூ.200 வரை உயர்த்துவது அவசியமாகிறது என தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் நிறைவேற்று உறுப்பினரான பேராசிரியர் தீபால் மேத்யூ தெரிவித்துள்ளார் .

தற்போதைய நிலை 2025 இற்குப் பிறகு நீடித்தால் தேங்காய் இருக்காது, மேலும் "நாங்கள் தேங்காய் இறக்குமதி செய்ய 08

2022 O/L பரீட்சை 2023 பெப்ரவரியில்

கல்வியமைச்சர் சுசில் அறிவிப்பு

2022ஆம் ஆண்டு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த க.பொ.தர சாதாரண பரீட்சை பிற்போடப்படுவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய, குறித்த பரீட்சையானது 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம் பெறுமெனவும் கல்வியமைச்சர் 08

IMF பிரதிநிதிகள் குழு இன்று இலங்கை வருகிறது

அரச பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இன்று (20) இலங்கைக்கு வருகைத் தரவுள்ளது.

இந்நிலையில் குறித்த குழுவானது இன்று முதல் 30ஆம் திகதி வரை இலங்கையிலிருந்து, ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கு இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 08

உக்ரைனில் நீண்ட போருக்கு நேட்டோ அமைப்பு அழைப்பு

பல ஆண்டுகள் நீடிக்கக் கூடிய போரில் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்க மேற்கத்திய நாடுகள் தயாராக வேண்டும் என்று நேட்டோ அமைப்பின் தலைவர் ஜென்ஸ் ஸ்டொல்டன்பேர்க் எச்சரித்துள்ளார்.

போரின் செலவு அதிகம், ஆனால் ரஷ்யா அதன் இராணுவ இலக்கை எட்டுவதற்க்கான செலவு அதனை விடவும் அதிகம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நீண்ட காலப் போர் ஒன்றுக்குத் தயாராக வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் எச்சரிக்கை விடுத்த நிலையிலேயே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. அதிக ஆயுதங்களை வழங்குவது உக்ரைனின் வெற்றிக்கான வாய்ப்பை அதிகரிக்கக் கூடும் என்று ஸ்டொல்டன்பேர்க் மற்றும் ஜோன்ஸன் இருவரும் குறிப்பிட்டுள்ளனர்.

"(இந்தப் போர்) பல ஆண்டுகள் எடுக்கும் என்ற உண்மைக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். உக்ரைனுக்கான ஆதரவை நாம் கைவிடக் கூடாது" என்று ஜெர்மனியின் பில்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஸ்டொல்டன்பேர்க் குறிப்பிட்டார்.

தாய்வானிலிருந்து மீன் இறக்குமதிக்கு சீனா தடை

தாய்வானில் இருந்து களவாய் வகை மீன்களின் இறக்குமதிக்கு சீனா தடை விதித்துள்ளது. மீன் வளர்ப்புக்கு பயன்படுத்தப்படுகின்ற தடை செய்யப்பட்ட மலாக்கிட் பசுமை இரசயானம் பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு சீனாவின் சுங்கத்துடன் இணைக்கப்பட்ட பொது நிர்வாகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. 2021 இல் சீனா தாய்வானின் அன்னாசிப்பழம், இனிப்பு ஆப்பிள்கள் போன்றவற்றுக்கு தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

சீன இராணுவத்தின் கட்டுப்பாடு தளர்வு

போர் அல்லாத சிறப்பு இராணுவ நடவடிக்கைகளில் சீன இராணுவத்தினர் வெளிநாடுகளில் ஈடுபட அனுமதி அளிக்கும் புதிய விதிமுறைகளில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பின் கையெழுத்திட்டுள்ளார்.

ஜூன் 15 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விதிமுறைகளில் அவர் கையெழுத்திட்டுள்ளார்.

ஆறு அத்தியாயங்களைக் கொண்டுள்ள இந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ள நோக்கங்களில், தேசிய இறையாண்மையை பராமரித்தல், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் போர் அல்லாத இராணுவ நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவையும் அடங்கியுள்ளன.

ஆப்கானில் சீக்கியர் கோயிலில் தாக்குதல்

ஆப்கான் தலைநகர் காபுலில் உள்ள சீக்கிய ஆலயம் ஒன்றின் மீது கடந்த சனிக்கிழமை காலை தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசுக் குழு பொறுப்பேற்றுள்ளது. கோயிலின் பாதுகாவலரைக் கொன்றபின் ஒருவர் துப்பாக்கியோடும் கையெறிக் குண்டுகளோடும் தற்கொலைத்தாக்குதல்நடத்தியதாகஐ.எஸ் அமைப்பு தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

சர்வதேச செய்திகள்

ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

காசாவில் இருந்து நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களுக்கு பதிலடியாக அந்த பகுதியை ஆளும் ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹமாஸ் இராணுவ முகாம் ஒன்றுக்குள் அமைந்திருக்கும் ஆயுத உற்பத்தித் தளம் மற்றும் மேலும் மூன்று நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

தெற்கு இஸ்ரேலில் இஸ்ரேலிய பொதுமக்களை நோக்கி ஹமாஸ் ரொக்கெட் விசியதை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அது குறிப்பிட்டது.

பங்களாதேஷ், இந்தியாவில் வெள்ளத்தால் 59 பேர் பலி

பங்களாதேஷ் மற்றும் இந்தியாவில் பருவமழை மற்றும் கடும் வெள்ளத்தால் குறைந்தது 59 பேர் உயிரிழந்திருப்பதோடு மில்லியன் கணக்கான மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

தாழ் நிலத்தில் இருக்கும் பங்களாதேஷில் வெள்ளம் ஏற்படுவது வழக்கம் என்றபோதும் பருவநிலை மாற்றம் இந்த நிலை அடிக்க ஏற்படுவதற்கு காரணமாக இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடும் மழைக்கு மத்தியில் மின்னல் தாக்கி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 12 மற்றும் 14 வயது சிறுவர்களும் அடங்குகின்றனர்.

துறைமுக நகரான சிட்டகொங்கில் நிலச்சரிவில் சிக்கி மேலும் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் இந்தியாவின் மேகாலயாவில் மழை வெள்ளத்தால் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டதாக அந்த மாநில முதல்வர் சன்ராத் சங்மா ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

அண்டைய மாநிலமான அசாமில் கடந்த ஐந்து நாட்களாக நீடித்த கடும் மழையால் 2.6 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பதினெட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

சைக்கிளில் இருந்து விழுந்த பைடன் நலமாக உள்ளார்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் டெலவார் மாநிலத்தில் இருக்கும் தனது கடற்கரை வீட்டுக்கு அருகில் சைக்கிளில் இருந்து விழுந்துள்ளார்.

எனினும் அவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. கடந்த சனிக்கிழமை சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 79 வயதான பைடன், அதில் இருந்து விழுந்த உடனே எழுந்து நின்றதோடு, தமக்கு எதுவும் ஏற்படவில்லை என்று கூறினார். அந்த வீடியோவை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் மிக வயதான ஜனாதிபதியாக பைடன் உள்ளார். அவருடைய உடல்நலம் குறித்த தகவல்கள் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. பைடன் 2ஆம் தவணைக்குப் போட்டியிடுவாரா என்பது தொடர்பான ஊகங்களும் அதிகரித்து வருகின்றன.

வெற்று காணிகளில் பயிரிட அனுமதி கோரும் தொழிலாளர் முயற்சிக்கு தோட்ட நிர்வாகம் மறுப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

தோட்டத்தில் பயிரிடப்படாத தரிசு நிலங்களில் உணவுப்பயிர்களைப் பயிரிட வாய்ப்புத்தருமாறு பலாங்கொடை ஹுனுவல தோட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில், ஓப்ப நாயக்க பிரதேச செயலகம் ஓப்பநாயக்க பொலிஸ் நிலையம் உட்பட பல அரச நிறுவனங்களையும் அரசியல் தரப்புக்களையும்,இத்தொழிலாளர்கள் அறிவுறுத் தியுள்ளனர்.எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்க பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுவதற்கு இவர்கள் உற்சாகமாகவுள்ளதால்,

இம்முயற்சிக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டுமென இப்பிரதேச சமூகசேவை பிரமுகர் கே. தியாகேஸ்வரன் தெரிவித்துள்ளார். எனினும் தொழிலாளர்களின் இம்முயற்சிக்கு தோட்ட நிர்வா கம் மறுப்புத் தெரிவித்து வருகிறது

இந்நிலையையடுத்து, தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பிரதேசத்திலுள்ள கிராமிய மக்கள் பயிர் செய்யப்படாதுள்ள தோட்ட நிலங்களை அடையாளப்படுத்தி அவற்றில் பயிர் செய்வதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

எனினும், தோட்ட தொழிலாளர்களின் இம்முயற்சியை தடை செய்யும்

வகையில் தோட்ட நிர்வாகம் தோட்டத்திற்குள் பிரவேசிக்க வேண்டாம் என எச்சரித்துள்ளதுடன், தோட்ட காணியினுள் வெளியார் நுழைவதைத் தடை செய்யும் வகையில் அறிவித்தல் பலகையும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் நாட்டில் வறுமை, பஞ்சம் நிலை ஏற்பட்டால் அதற்கு முகம் கொடுக்க தயாராகுமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்க தரப்புக்கள் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.இதையடுத்தே,இம்முயற்சிகளில் இறங்கியுள்ளதாக இம் மக்கள் தெரிவிக்கின்றனர்

எனவே, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கிராமிய மக்களின் இம்முயற்சிக்கு ஆதரவளித்து பயிர்ச்செய்கைக்கான காணிகளை பெறுவதற்கு சகல தரப்பினர்களும் உதவி செய்ய வேண்டும் எனவும் கே. தியாகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலைச்சாரல்

வீட்டின் மேல்மாடியில் தீ பரவியதால் சொத்துக்கள் எரிந்து சேதம்

(பதுளை தினகரன் நிருபர்)

பதுளை – சுமணதிஸ் ஸகமவில் வீட்டு மேல் மாடியில் திடீரென தீப்பற்றியதில் பல இலட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. இத்தீச்சம் பவத்தின்போது மேல் மாடியிலிருந்த சிறுவன் உட்பட மூவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமையன்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்றது. முதியங்கன ஸ்ரீராஜ மஹாவிஹாரைக்கு பின்னாலுள்ள மாடி வீட்டில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. வீட்டில், வேல்டிங் திருத்தவேலைகள் செய்துகொண்டிருந்த வேளையிலே தீ சடுதியாக பரவியுள்ளது.இவ்வேளையில்,வீட்டில் விற்பனைக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த பல தரப்பட்ட பட்டாசுகள் சரமாரியாக வெடித்துச் சிதறியதால் மேலும் பல அனர்த்தங்கள் நிகழ்ந்தன. வெள்ளிக்கிழமை விசேட தொழுகைக்கு ஆண்கள் சென்றிருந்த வேளையில் இச்சம்பவம நிகழ்ந்ததால்,சடுதியாக செயற்பட்ட அக்கம் பக்கத்தார்,வீட்டிலிருந்த சிறுவனையும், இளையதாயாரையும்,இன்னுமொருவரையும் காப்பாற்றினர். பதுளை மாநகரசபை தீயணைப்பு படையினர் தீயை அணைத்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பதுளை பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொள்ள சிரமப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களில், ஆயிரம் மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினர் இதற்கான ஏற்பாடுகளைச்செய்தனர்.

(புசல்வை தினகரன் நிருபர்)

டயர் தட்டுப்பாடுகளால் போக்குவரத்து சேவைகள் இடை நிறுத்தம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடைக்கான இலங்கை போக்குவரத்து பஸ்சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையால் பஸ் வாரப்பயணச் சீட்டுப் பெற்றுள்ள பாடசாலை மாணவர்கள், அரச தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயமாக பலாங்கொடை இலங்கை போக்குவரத்து சபை டிப்போ முகாமையாளர் தர்மசிரி ஹரிச்ந்திரவிடம் வினவியபோது டயர் தட்டுப்பாடுகளால், இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தற்போது பலாங்கொடை டிப்போவிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பெல்மதுளை, கல்தோட்டை, தியவின்ன மற்றும் உடகந்த உட்பட 25 வீதிகளின் போக்குவரத்துச் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி தெப்பக்குளத்தை மாநகரசபை பொறுப்பேற்க வேண்டுமென கோரிக்கை

(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)

கண்டி மாநகரை அழகுப்படுத்தும் வரலாற்றுப்புகழ்மிக்க தெப்பக்குளத்தை கண்டி மாநகர நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென கண்டி மாநகரசபை மேயர் கேசரசேனா நாயக்க தெரிவித்தார்.

அண்மையில் கண்டி தெப்பக்குளத்திலுள்ள மீன்கள் இறந்துள்ளமை பற்றிக் கவனம்செலுத்தப்பட்டது. ரத்துபோக்குவ என்ற இடத்தில் கழுவப்படும், நீர்ப்பாசன திணைக்களத்தின் கனரக வாகனங்களின் கழிவுகள் தெப்பக்குளத்துக்குள்கலப்பதாலே, மீன்கள் இறந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இதையடுத்தே, கண்டியை அழகுப்படுத்தும் இத்தெப்பக்குளத்தை உடனடியாக காப்பாற்ற வேண்டும் எனவும் இதனை மாநகர சபை நிர்வாகம் கையேற்க வேண்டும் எனவும் மாநாகரசபை உறுப்பினர் வருனலியனகே ஆலோசனை முன்வைத்தார். இதையடுத்தே, கண்டி மாநகரசபை மேயர் கேசரசேனாநாயக்க தெப்பக்குளம் மாநகரசபை நிர்வாகத்தின் கீழ் வரவேண்டுமென தெரிவித்தார். தற்பொழுது, இக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காட்டு யானைகளால் குடியிருப்புக்கள் ஆக்கிரமிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சப்ரகமுவ மற்றும் தென்மாகாண எல்லைகளில் காட்டு யானைகள் கிராமியக் குடியிருப்புக்கள் மற்றும் விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பதால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

எம்பிலிபிட்டிய, சூரியவெவ, மதுனாகலஅபயபூமி, வெலிவெவ வெவேகம பந்தகிரிய போன்ற பிரதேச மக்களே இந்நிலைமைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.இப்பிரதேச காடுகளில் வசிக்கும் யானைகள் இக்கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் நுழைந்து பயிர்களை நாசப்படுத்துவதாகவும் மாலை நேரங்களில் இருள் சூழ்வதற்கு முன்னரும் அதிகாலை வேளையிலும் இப்பிரதேசங்கள் முழுவதையும் ஆக்கிரமிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சைவ மாநாடு சிறப்புற நடைபெற லிப்பகலை அம்மன் ஆலயத்தில் பூஜை

(ஹற்றன்விசேட நிருபர்)

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் தலைவர் முருகப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் தலைமையில்,22வது சைவ மாநாடு 18, 19ம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் சிவாச்சாரியர்கள், சைவ மதத்தலைவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு சிறப்புற அமைய இலங்கை மலையக சைவ திருப்பணிகள் ஒன்றியத்தின் தலைவர் அம்மாசி நல்லுசாமி ஏற்பாட்டில் லிப்பக்கலையூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

சைவமாநாடு வெற்றிபெற வேண்டி சிதறு தேங்காய்களும் உடைக்கப்பட்டன.

அறநெறி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சிறுவர்கள், அமைப்பின் முக்கியஸ்தர்கள் தோட்டத் தலைவர்கள் மற்றும் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இதில், கலந்துகொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூன் 20 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.32
லுஹர் - 12.13
அஸர் - 03.40
மஃரிப் - 06.28
இஷா - 07.44

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆனி 06
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

வரிசைகளில் உயிரிழந்த நபர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஐ.ம.ச கோரிக்கை

எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளில் உயிரிழந்தவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படாவிட்டால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தின் அமைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார். இதுவரையில் சுமார் 13 பேர் எரிபொருள் வரிசையில் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு 08

கொழும்பு கல்வி வலயம் மற்றும் நகர்ப்புற பாடசாலைகள் ஒரு வாரத்திற்கு பூட்டு

ஒன்லைன் மூலமான கல்வியை தொடர ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் –அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு கல்வி வலய பாடசாலைகள் உட்பட ஏனைய முக்கிய நகரங்களின் பாடசாலைகள் இன்று முதல் ஒரு வார காலத்திற்கு மூடப்படவுள்ளன.

எனினும் மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒன்லைன் மூலமான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அனைத்து ஆசிரியர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த வாரத்தின் கல்வி நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் 08

ஜனாதிபதியுடன் ஆளும் தரப்பு முக்கிய சந்திப்பு

இன்று ஜனாதிபதி மாளிகையில் ஏற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் தற்போதைய சூழ்நிலை மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட பேச்சுவார்த்தையொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் இன்று 08

ரஷ்யாவிடமிருந்து இலகு அடிப்படையில் எரிபொருள்

9 கட்சிகளின் தலைவர்கள் ரஷ்ய தூதுவருடன் பேச்சு

லோரன்ஸ் செல்வநாயகம்

ரஷ்யாவிடம் இருந்து இலகு கடன் நிபந்தனையின் அடிப்படையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக ரஷ்ய தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 9 கட்சிகளின் தலைவர்கள் தயாராகி வருகின்றனர். முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலியே ரதன தேரர், கெவிந்து குமாரதுங்க, டாக்டர் பி. வீரசிங்க உள்ளிட்டவர்களே ரஷ்ய தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். 08

எரிபொருளுக்காக வரிசையில் நின்றோருக்கு சிற்றுண்டிகளை வழங்கிய கிரிக்கெட் பிரபலம்

கொழும்பு வோட் பிளேஸ் மற்றும் விஜேராம மாவத்தை ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருளை நிரப்ப

வரிசைகளில் நின்ற மக்களுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரொஷான் மஹாநாம சிற்றுண்டி மற்றும் தேனீர் வழங்கி 08

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்;

எல்லை மீறும் பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

ஷம்ஸ் பாஹிம்

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்குபவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமது கடமை எல்லை மீறி செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் பொலிஸார் ஈடுபடாத காரணத்தினால் பொலிஸாருடன் மோதலில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு 08

மாணிக்கக்கல் வர்த்தகர் ஸவாஹிர் ஹாஜியார் காலமானார்

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் அனுதாபம்

பேருவளை விசேட நிருபர்

பேருவளை பகுதி இரத்தினக்கல் வர்த்தகரும் பிரபல சமூக சேவையாளருமான ஏ.எச். எம். ஸவாஹிர் ஹாஜியார் (வயது 77) சனிக்கிழமை இரவு (18) 08

குடும்பத் தகராறால் கைகலப்பு;

தந்தையும், மகனும் ஆஸ்பத்திரியில் அனுமதி

வாழைச்சேனையில் சம்பவம்

தந்தையும், மகனும் தாக்குதலுக்குள்ளான நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக தந்தையையும் மகனையும் இவ்வாறு குழுவொன்று இரும்புக் கம்பியால் மறைந்திருந்து தாக்கியுள்ளதாக 08

இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தை இணைப்பதற்கான சட்டம்

நான், திரு. பிரேம் நாத் சி. டோலவத்த, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இலக்கம் 53(1) இன் கீழ் "இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தை இணைப்பதற்கான சட்டம்" என்ற சட்ட மூலத்தை இதன் மூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்க உத்தேசித்துள்ளேன்.

பின்வரும் பொதுவான நோக்கங்களைக் கொண்ட அந்த சங்கத்தை இணைப்பதே மசோதாவின் நோக்கங்களாகும்.

1. இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தால் ஆட்சேர்ப்பு பயிற்சி மற்றும் பட்டறைகளை நடத்துதல்
2. கிரிக்கெட் போட்டிகளுக்கு நடுவர்களை நியமித்தல்
3. நடுவர்களை தரப்படுத்துதல் அவர்களின் நலனுக்காக உழைத்தல் மற்றும் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துதல்.

மற்றும் பல.

பிரேம்நாத் சி. டோலவத்த,
பாராளுமன்ற உறுப்பினர்.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2022 யூன் 22ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 93,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09122I236	LKA18222L237	LKA36423F231	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	40,000	25,000	28,000	93,000

ஏல விற்பனைத் திகதி : 2022 யூன் 22
தீர்ப்பனவுத் திகதி : 2022 யூன் 24
வழங்கப்படும் திகதி : 2022 யூன் 24
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 யூன் 22, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

எம். இசட். எம். ஆசிம்
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

தினகரன்
THINAKARAN
நிகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 06ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 19

குறள் தரும் சிந்தனை

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.

கற்றதைப் பிறர் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்கிச் சொல்ல முடியாதவர், கொத்தாக மலர்ந்திருந்தாலும் மணம் கமழாத மலரைப் போன்றவர்.

நாட்டில் மற்றொரு வைரஸ் தொற்று தீவிரமடையும் ஆபத்து அறிகுறி!

இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தற்போதைய சூழலில், மற்றொரு வைரஸ் நோயொன்று தீவிரமடையும் அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கின்றது. அது தான் 'இன்புளுவென்ஸா ஏ' காய்ச்சலாகும்.

நாட்டில் ஏற்கனவே நிலவி வரும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக எரிபொருள், எரிவாயு என்பவற்றை பெற்றுக் கொள்வதற்காக பாவனையாளர்கள் மணித்தியாலக்கணக்கில் வரிசையில் காத்திருக்கும் நிலைமை நீடித்த வண்ணமுள்ளது. அத்தோடு அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகளும் பெரிதும் அதிகரித்துள்ளன. பொருளாதார நெருக்கடியின் விளைவாகப் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மக்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சூழலில்தான் இந்நோய் அச்சுறுத்தல் தோற்றம் பெற்றிருக்கின்றது. அதனால் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இவ்வாறான நோய்த் தொற்றுகளைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கனவே நாடு எதிர்கொண்ட கொவிட் 19 தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக கடும் முயற்சி, அர்ப்பணிப்பு மிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தல் பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்தவென முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாகவே இப்பொருளாதார நெருக்கடி தோற்றம் பெற்றது.

கொவிட் 19 தொற்று பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரப்பட்டு சில மாதங்கள்கடந்துள்ளது. அதற்கிடையில் மற்றொரு வைரஸ் நோய் தீவிரமடையும் அச்சுறுத்தல் ஆரோக்கியமானதல்ல. அதுவும் பொருளாதார நெருக்கடி நிலவும் சூழ்நிலையில் நல்லதல்ல. அதனால் இன்புளுவென்ஸா ஏ பரவுதல் அச்சுறுத்தலை சாதாரணமாக நோக்கலாகாது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான பிரதேசத்தில் இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் முதல் பதிவாகத் தொடங்கினர். ஜுன் மாதாமாகும் போது இத்தொற்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 75 பெண்கள், 33 பெண்கள், 12 சிறுவர்கள் என்று குறிப்பிட்ட சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் கபில கன்னங்கர, இத்தொற்றினால் 14 பேர் உயிரிழந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

சிறுவர் நோயியல் விஷேட மருத்துவ நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா, நாட்டின் பல பிரதேசங்களிலும் சிறுவர் முதல் வளர்ந்தவர்கள் வரையில் புதிய இன்புளுவென்ஸா தொற்றுக்கு உள்ளாவர்களாக அடையாளம் காணப்படும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

'இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு சாதாரண காய்ச்சல், தடிமன், இருமல், உடல் வலி, தொண்டை வலி, உடல் சோர்வு உள்ளிட்ட அறிகுறிகள் வெளிப்படும். அவை 3, 4 நாட்களில் சாதாரணமாகக் குணமடைந்து விடலாம். ஆனால் கர்ப்பிணி பெண்கள், 2 வயதுக்கு குறைந்த சிறுவர்கள், தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்கள் போன்றோருக்கு இத்தொற்று ஏற்பட்டால் அது அதிக அச்சுறுத்தல் மிக்க நிலையை ஏற்படுத்தி விடலாம். குறிப்பாக நிமோனியாவைக் கூட தோற்றுவிக்கலாம். அதன் காரணத்தினால் தற்போதைய சூழலில் இவ்வாறானவர்களுக்கு இத்தொற்று ஏற்படுமாயின் அது குறித்து விஷேட கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ளத் தவறக் கூடாது' என்று வலியுறுத்துகிறார் விஷேட மருத்துவ நிபுணர் ஜுட் ஜயமஹா.

இதேவேளை, இன்புளுவென்ஸா ஏ மாத்திரமல்லாமல் டெங்கு வைரஸ் நோய்த் தாக்கமும் நாட்டில் நிலவிக் கொண்டிருப்பதை மருத்துவ துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர். டெங்கு, நுளம்புளால் பரப்படும் ஒரு நோயாக இருந்தாலும் இன்புளுவென்ஸா ஏ ஆளுக்காள் தொற்றிப் பரவக்கூடியதாகும். இரண்டு நோய்களும் முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளவும் குணப்படுத்திக் கொள்ளவும் கூடியவை. ஆனால் இரண்டு நோய்களுக்கும் காய்ச்சல் பொதுவான அறிகுறியாக இருக்கும்.

அதனால் இந்நோய்களுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் கொவிட் 19 பெருந்தொற்று பெரு வீழ்ச்சிக்கு கொண்டு வரப்பட்டு சில மாதங்கள் கடந்துள்ள சூழலில் மற்றொரு நோய் தலைதூக்கும் அச்சுறுத்தல் ஏற்பட இடமளிக்கலாகாது. ஆகவே இன்புளுவென்ஸா ஏ உள்ளிட்ட நோய்களின் தொற்றதைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அது இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்ளவும் நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் பெரிதும் உதவும். அதனால் நோய்த் தவிர்ப்பே ஆரோக்கியப் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

அடிக்கடி ஸ்தம்பிதமடையும் நிலையில் நுரைச்சோலை அனல்மின் நிலையம்!

இரண்டரை மாத காலம் தொடரப் போகின்ற திருத்தப் பணிகள்

மின்னுற்பத்தி பாதிக்கப்படுவதற்கான காரணங்கள் எவை? சீனாவின் கட்டுமானங்களில் குறைபாடு உள்ளதா? தரமற்ற உபகரணங்களால் மின்னுற்பத்தி செயலிழக்கின்றதா? மக்கள் மத்தியில் எழுகின்ற தவிர்க்க முடியாத சந்தேகங்கள்!

இலங்கையின் மின்சாரத் தேவையை அனல்மின்வலு கொண்டு பூர்த்தி செய்வதை குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையத் திட்டங்களில் முதலாவதான பாரிய திட்டமே நுரைச்சோலை அனல்மின் நிலையத் திட்டமாகும். வடமேல் மாகாணத்தில் உள்ள புத்தளம் மாவட்டத்தில்ஒவ்வொன்றும் 300 மெகாவாற் திறனளவு கொண்ட மூன்று உற்பத்தி நிலையங்களை அமைப்பது இத்திட்டத்தின் முழுமையான வரைவாகும்.

நுரைச்சோலை மின்சார நிலையம் அமைக்கப்பட்டதில் இருந்து அதன் செயற்பாடுகள் முழுமையான திருப்தி தருவதாக இருக்கவில்லை. மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தில் அடிக்கடி பழுது ஏற்படுவதும், மின்விநியோகம் தடைப்படுவதும் வழமையான சம்பவங்களாகி விட்டன. இப்பாதிப்புக்காக பலவிதமான காரணங்கள் கூறப்பட்டாலும், அங்குள்ள உபகரணங்கள் தரமாக இல்லையென்பதுதான் மறைக்க முடியாத காரணமாகும்.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணத்தை சீனாதான் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக சீனாவின் மீது மக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். சீனாவின் தரமற்ற கட்டுமானம் காரணமாகவே நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் அடிக்கடி பழுதடைவதாக மக்கள் மத்தியில் நிலவுகின்ற அபிப்பிராயத்தை புறந்தள்ளி விடவும் முடியாது.

21ம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தம் வரை இலங்கையின் தேசிய மின்தேவையின் பெரும் பகுதியை நீர்மின் வலுவே நிறைவேற்றி வந்தது. இருப்பினும் வரட்சியான காலநிலை காரணமாக அங்கு மின்னுற்பத்தி பாதிக்கப்படுவதால் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. அது மாத்திரமன்றி நாட்டில் மின்சாரத்தின் தேவை அதிகரித்து விட்டதால் நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்வதென்பது முடியாமலும் போய் விட்டது. எனவே நீர் மின் வலுவுக்கு பாதிலாக மாற்று மின்வலுவொன்றின் தேவை நீண்டகாலங்களாக உணரப்பட்டே வந்தது. அனல் மின் நிலையமொன்று அமைக்கப்பட வேண்டும் என்று 1970 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டபோதிலும் இத்திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நுரைச்சோலை அனல் மின்நிலைய நிர்மாணப் பணிகள் மூன்று கட்டங்களாக திட்டமிடப்பட்டன. முதற்கட்டப் பணிகள் 2007 ஆம் ஆண்டு ஆரம்பமாகின. அதன் பின்னர் கட்டம் கட்டமாக நிர்மாணப் பணிகள் நிறைவுற்றன. புத்தளம் மாவட்டத்தில் பாலாவி_ கல்பிட்டி பிரதான வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் கடற்கரையோரமாக 95 ஹெக்டயர் நிலப்பரப்பில் நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைந்துள்ளது.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகளின் முக்கிய பங்காளியாக சீனாவின் தேசிய இயந்திர ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கூட்டுத்தாபனம் அமைந்துள்ளது. இதன் கட்டுமானப் பணிகளில் இலங்கைப் பொறியியலாளர்கள் மற்றும் பணியாளர்களுடன், சீனாவைச் சேர்ந்த பணியாளர்களும் இணைந்து செயற்பட்டனர்.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டால் சுற்றுவட்டாரத்தில் உள்ள விவசாய நிலங்கள் பாதிப் படையும், அதிக வெப்பம் மற்றும் தூசுப் படலங்கள் வெளியேறி சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் என சுழலியலாளர்களால் ஆரம்பத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. ஆனாலும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

நிலக்கரியை எரித்து மின் உற்பத்தி செய்வதால் வெளியேறும் புகையை வடிகட்டி சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாதவாறு வெளியேற்றும் பொறிமுறை கையாளப்படவுள்ளதாக பதில் கூறப்பட்டது. இவ்வாறு புகை வெளியேற்றப்படும் போது வடிகட்டப்படும் துகள்கள் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கு ஒருதடவை வெளியேற்றப்படும். சுழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாதவாறே அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், பாவிக்கப்பட்ட நீர் மீண்டும் சுத்தமாக்கப்பட்டு கடற்கரையில் வெளியேற்றப்படுமெனவும் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த மின் நிலையம் அமைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு மணித்தியாலயம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 114 தொன் நிலக்கரி தேவைப்படுகிறது. மூன்று மாதங்களுக்குத் தேவையான நிலக்கரியை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான களஞ்சிய வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. நிலக்கரிகள் 10 மில்லி மீற்றர் பரிமாணமுடைய சிறு துண்டுகளாக்கப்பட்டு, கந்தகம் மற்றும் நைதரசன் வேறாக்கப்பட்டு கடல்நீரை வெப்பப்படுத்தி அதிலிருந்து பெறப்படும் நீராவியைக் கொண்டு இயந்திரங்கள் செயற்படுகின்றன.

அனல் மின் உற்பத்தியின் மூலம் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் சூழலியலாளர்கள், நிபுணர்கள் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் எடுத்துக் கூறியும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை அங்கு அடிக்கடி ஏற்படுகின்ற பழுது காரணமாக மின்சாரம் தடைப்படுவதும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது. சீனாவின் கட்டுமானம் தரமற்றதா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

1.35 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் இருந்து முதற்கட்டமாக 300 மெகாவோட் மின்சாரம் 2011 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. பின்னர் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத்தின் மூலம் 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

கடந்த காலங்களில் 25 தடவைகளுக்கும் மேலாக நுரைச்சோலை அனல் மின் நிலையம் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது.இதன் காரணமாகவே சீனாவின் நிர்மாணம் குறித்த சந்தேகம் மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாததாக உள்ளது.

உலகின் ஏனைய நாடுகள் நிலக்கரி மூலமான மின் உற்பத்தியை நிறுத்தி மாற்றுத் திட்டங்களுக்கு செல்லும் போது, இலங்கையில் இந்த நிலைமை நீடிப்பது சூழலியலாளர்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் ஒரு பகுதி கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் திருத்த வேலைக்காக மூடப்பட்டது. இரண்டரை மாதங்களுக்கு இதனை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இதனால் பிரதான மின் கட்டமைப்பு கிடைக்க வேண்டிய இடங்களில் பாதிப்பு ஏற்படும் என்றும் 300 மெகாவாட் மின்சாரம் இல்லாமல் போகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாட்டின் பொருளாதார நெருக்கடியால் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு நுரைச்சோலை மின்நிலையத்தில் ஒரு பகுதி மூடப்படுவதால் தற்போது மின்வெட்டு நேரம் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொறியலாளர் சங்கத்தின் செயலாளர் கூறுகையில் "நுரைச்சோலை மின் நிலையத்தில் இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன்னர் செய்திருக்க வேண்டியதை செய்ய முடியாமல் போனதன் காரணமாகவே கட்டாயமாக இப்போது செய்ய வேண்டியுள்ளது. இதனால் 300 மெகாவாட் மின்சாரம் இல்லாமல் போகும்.இது மொத்த மின்சார அளவில் 15 வீதமாகும். இதனால் தற்போதைய நிலைமையில் மின்வெட்டு நேர அளவு அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது" எனக் குறிப்பிட்டார்.

ஆரம்பகாலம் தொட்டே சரியான தொழில் நுட்ப முறைகளைப் பின்பற்றத் தவறியதே இது போன்ற பிரச்சினைகளுக்கு பிரதான காரணம் என்பதுதான் பொருத்தமான கருத்தாகும். சீனாவின் உபகரணங்கள் தரமான வையா என்பது பற்றிய சந்தேகமும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

எஸ்.சாரங்கன்...✍

இலங்கைக்கு உதவியளிப்பதில் இந்திய பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஒருமித்த ஆதரவு

இலங்கைக்கு இன்றைய நெருக்கடி வேளையில் உதவுவதில் இந்தியாவின் பங்கு குறித்த விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து இந்திய மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில் உணவு, மருந்துகள், சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கு கடும் பற்றாக்குறை காணப்படுவதால் இலங்கை மக்கள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். இலங்கைக்கு கடன் உதவித் திட்டத்தின் கீழ், எரிபொருள், எரிவாயு, உரம் மற்றும் உணவு பொருள்களை வழங்கி இந்தியா உதவி வருகிறது.

இந்நிலையில் இலங்கை நிலைமை குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தலைமையில் டெல்லியில் நேற்றுமுன்தினம் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் வெளியுறவுத் துறை இணை அமைச்சர்கள் முரளீதரன், மீனாட்சி லேகி, ராஜ்குமார் ரஞ்சன் சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் பா.ஜ.கவைச் சேர்ந்த ராஜ்தீப் ராய் மற்றும் ஜி.வி. எல். நரசிம்மராவ் சிவசேனாவின் பிரியங்கா சதுர்வேதி, தி.மு.க எம்.பி திருச்சி சிவா, பிஜு ஜனதா தளம் சார்பில் சுஜீத் குமார் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அந்நாட்டில் வெளியேறி இந்தியாவிற்கு வருவோர் உள்ளிட்டவை குறித்து அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. பல்வேறு விவகாரங்கள் மற்றும் இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவின் பங்கு குறித்த சாதகமான சூழ்நிலை குறித்து விவாதம் நடைபெற்றதாக மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்த கடினமான நேரத்தில் நமது அண்டை நாடான இலங்கையுடன் நிற்பதன் அவசியத்திற்கு இந்த ஆலோசனை கூட்டத்தில் ஒருமித்த ஆதரவு தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதநேயத்தின் அடையாளமாக வாழ்ந்த மக்கள் சேவகன் மர்ஹூம் யு.எல்.எம்.பாரூக்



81 ஆவது பிறந்த தினமான இன்று, அன்னாரின் புதல்வியின் நினைவுப் பதிவு

அப்பா உங்கள் கைப்பிடித்து நடந்த நாட்கள், பழைய கதைகளை நீங்கள் பக்கம் பக்கமாகச் சொல்லக் கேட்டு ரசித்த பொழுதுகள், என்னைப் பற்றி நீங்கள் பலரிடமும் பெருமையாகச் சொல்லக் கேட்டு பெருமிதம் கொண்ட தருணங்கள்...

கேட்பதை மட்டுமல்ல, கேட்காததையும் கூட வாங்கித் தந்து "இது போதுமா" எனக் கேட்கும் உங்கள் அன்பிற்கு ஒன்றுமே ஈடில்லை அப்பா. அடிக்கடி நலம் விசாரித்து மறக்காமல் "சாப்பிட்டீர்களா" எனக் கேட்டு "நன்றாகப் படிக்க வேண்டும்" என நிதமும் கூறி "உங்களால் முடியாதது ஒன்றுமே இல்லை" என தன்னம்பிக்கை மட்டுமல்ல, தைரியத்தையும் போசித்து அப்பா என்ற ஒற்றை வார்த்தைக்கு மேலாக இருந்தீர்களே அப்பா...

இனி வரவே மாட்டீர்கள் எனத் தெரிந்தும், 'போதும் அப்பா வந்து விடுங்கள்' என மனம் அடிக்கடி உங்களை அழைப்பதை உணர்கின்றேன். யதார்த்தங்களையும் மீறி வாழ்வில் மீண்டும் ஒரு முறையாவது சந்தித்து விட மாட்டோமா என ஏங்குகின்றது மனம்.

அப்பா, நீங்கள் இருந்திருந்தால் 81 ஆவது அகவையில் தடம் பதிக்கும் நாள் இன்று. 1988 இல் கேகாலை மாவட்டத்தின் முதல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராய் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து வரலாறு படைத்த நாளும் இன்றுதான்.

மனிதநேயத்தின் அடையாளம் என் அப்பா, மக்கள் சேவையே வாழ்க்கை என வாழ்ந்தவர், இன மத மொழி வேறுபாட்டினை அறவே வெறுத்தவர், பட்டம் பதவிகள் பல பெயருக்குப் பின்னால் வந்த போதிலும் மனதளவில் ஒருபோதும் பெருமை கொள்ளாது இறுதிவரை எளிமையாகவே வாழ்ந்தவர். நலிவுற்ற சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே நோக்காகக் கொண்டிருந்தவர். தனது உழைப்பின் பெரும் பகுதியை மக்களின் நலனுக்காகவே செலவு செய்தவர். தன்னைச் சூழ்ந்த சமூகம் எவ்விதத் துன்பமும் இன்றி வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை இறுதி மூச்சு வரை கொண்டிருந்தவர்.

கேகாலை மாவட்டத்தில் மட்டுமன்றி முழு இலங்கையிலுமே பெயர் போன மக்கள் சேவகர் அவர். அப்பா இவ்வளவு சொல்லியும் நீங்கள் மட்டும் மௌனமாய் இருக்கின்றீர்கள். உங்களிடம் இருந்து வராத பதிலுக்காய் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன். இனிய பிறந்த தின வாழ்த்துக்கள் அப்பா! அல்லாஹ் உங்களுக்கு மேலான சுவர்க்கத்தைப் பரிசளிப்பானாக!

எம்.ஆர்.எப் ரிப்தா...✍
(தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

தாயகத்தை அச்சுறுத்தலில் இருந்து மீட்டெடுத்த தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

இலங்கை பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருந்த சூழலில் நாட்டின் பாதுகாப்பையும், இறைமையையும் உறுதிப் படுத்தி மக்களையும் நாட்டையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கான தலைவர் ஒருவரின் தேவை நாட்டில் பரவலாக உணரப்பட்டிருந்தது.

இன்று பிறந்த தினம்

இந்தச் சூழலில் 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப் பட்டது. அதற்கேற்ப 2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற இத்தேர் தலில் பல அரசியல் கட்சிகள் போட் டியிட்டன. அவற்றில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியும் ஒன்றாகும். இக்கட்சியின் சார்பாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்டார்.

அவர் ஏற்கனவே எந் தவொரு தேர்தலிலும் போட்டியிடாதவர் மாத் திரமல்லாமல் நாட்டில் பிரதேச, மாகாண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக ளையும் வகித்திராதவரும் ஆவார். ஆனால் நாட்டுக்குப் பொருத்த மான செயற்றிறன் மிக்க தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்பதை மக்கள் தீர்மானித்து அவ ருக்கு ஆதரவு நல்கினர். அதன்படி 69 இலட்சம் மக்களின் நல்லாதர வைப் பெற்று நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகி பதவியேற்றார்.

1949 ஜூன் மாதம் 20 ஆம் திகதி பிறந்த இவர், ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்ததைத் தொடர்ந்து நாட்டுக்கு சேவையாற்றும் நோக்கில் 1971 இல் இராணுவத்தில் இணைந்தார். அன்று தொடக்கம் 1991 வரையும் இராணுவத்தில் பணியாற்றிய இவர், பல பதவி உயர்வுகளையும் கௌர வங்களையும் பெற்றுக் கொண்டார். அத்தோடு துறைசார் உயர்கல்வி யைப் பெறவும் அவர் தவறவில்லை.

இவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் கற்று தகவல் தொழில்நுட்பவியலாளரா னார். அத்துறையிலும் தொழில் புரிந் தார்.

இவ்வாறான சூழலில் 2005 இல் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் தற்போதைய ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாள ராகவும் நகர அபிவிருத்தி அமைச்சு செயலாளராகவும் கடமையாற்றி னார். இப்பதவிகள் ஊடாக நாட் டுக்கும் மக்களுக்கும் இவர் ஆற்றிய சேவைகள், மக்கள் மத்தியில் அவ ருக்குத் தனியிடத்தைப் பெற்றுக் கொடுத்தன. அதன் ஊடாக மக்க ளின் நம்பிக்கைக்குரியவரானார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்தப் பின்புலத்தில் ஜனாதிபதி யாகப் பதவியேற்றது முதல் நாட்டை நாட்டுக்கே உரிய தனித்துவ அடையாளங்க ளுடன் கட்டியெழுப்புவ தற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலானார். அந்த வகையில் விவசாயப் பொரு ளாதார மற்றும் நீர்ப்பாசன நாகரீகத்தைக் கொண்ட இந்நாட்டை அதற்கேற்ப, அதனை அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்புவ தில் கவனம் செலுத்தினார்.

இந்நிலையில் இந்நாட் டில் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பொருட்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற திட்டத்தை அவர் முன்வைத் தார். அதற்கேற்ப உள்நாட் டில் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குதி செய்வதை அவர் தற்காலிகமாக இடைநிறுத்தினார். உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப் பொருட்களை வெளிநாடுகளிலி ருந்து இறக்குமதி செய்வதன் மூலம் பெருந்தொகை அந்நியச் செலாவணி வீண்விரயமாவதைத் தடுப்பதும் இத்திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 16 உணவு உற்பத்திப் பொருட்களின் இறக்கு மதி இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அப்பொருட்களின் உள் நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அப் பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப் பைப் பெற்றுக் கொடுப் பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக இப்பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்து கொள்ளும் நிலை உருவா கியுள்ளதோடு நாட்டின் தேவையை நிறைவு செய்யக் கூடிய நிலைமையும் ஏற்பட் டிருக்கின்றது.

இதேவேளை இந்நாட்டின் விவசாயப் பொருளாதாரத் துறையை மேலும் வலுப் படுத்தி மேம்படுத்தவென நீர்ப்பாசனத் துறையை அபி விருத்தி செய்யும் நோக்கில் 5000 கிராமியக் குளங்களைப் புனரமைப்பதற்கான 'நீர்ப்பா சன செழுமை' என்ற வேலைத் திட்டம் ஜனாதிபதியின் சிந்த னைக்கு அமைய ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் ஒரங்க மாக 94 கிலோ மீற்றர்கள் நீளமான வடமேல் காய்வாய்த் திட்டத்தின் ஒரு பகுதியான 26 கிலோ மீற்றர் நீளம் கொண்ட சுரங்க நீர்ப்பாசன கால்வாய்த் திட்டத்தை அனுரா தபுரம் பலுகஸ்வெவவில் ஜனா திபதியே தொடக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பல வருடங்களாகப் புனரமைக்கப்ப டாது தூர்ந்து போயுள்ள குளங்க ளைப் புனரமைக்கும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளன.

மேலும் இந்நாட்டில் இயற் கைப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவித்து மேம்படுத்துவதற் கான பல்வேறு திட்டங்களும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏனெனில் தென்னாசியாவில் இர சாயனப் பசளையை அதிகளவில் பயன்படுத்தும் நாடாக இலங்கை விளங்கிக் கொண்டிருக்கின்றது. இரசாயனப் பசளையானது மனித ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழ லுக்கும் பொருத்தமானதல்ல. இப் பசளையின் நீண்ட காலப் பாவனை யின் விளைவாகவே இந்நாட்டில் தொற்றா நோய்களுக்கு உள்ளான வர்களாக இனங்காணப்படுபவர்க ளின் எண்ணிக்கை பெரிதும் அதிக ரித்து காணப்படுகின்றது. அதனால் இயற்கை பசளைப் பயன்பாட்டுக்கு உள்நாட்டு விவசாயத்துறை திரும்ப வேண்டும் என்ற கோரிக்கை பல வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தின் கொள்கைப் பிர கடனத்தில் நச்சுத்தன்மையற்ற உணவைப் பெற்றுக் கொள்வது மக்களின் உரிமை என உறு திப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தி லும் இந்நாட்டு விவசா யத்துறைக்கு இயற்கைப் பசளையை அறிமுகப்ப டுத்தி மேம்படுத்துவது குறித்த முன்மொழிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் கடந்த வரவு செலவுத்திட்டத்தி லும் வேலைத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

அதேநேரம் நாட்டின் ஏனைய துறைகள் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைக ளையும் ஜனாதிபதி தலை மையிலான அரசாங்கம் கவனம் செலுத்தி முன்னெ டுக்கவும் தவறவில்லை.

2020 முதல் உலகிற்கே பெரும் சவாலாக விளங்கும் கொவிட் 19 தொற்று அதே ஆண்டு மார்ச் முதல் இங்கு பதிவாகத் தொடங்கியது. இது சுகாதாரத் துறைக்கு மாத்திரமல்லமால் நாட்டின் சமூக, பொருளாதாரத் துறைக் கும் பெரும் சவாலாக விளங் கிக் கொண்டிருக்கின்றது. அதனால் இச்சவாலை வெற்றிகரமாக முறிய டிப்பதற்கான தலைமையையும் வழி காட்டல்களையும் ஜனாதிபதி நேரடி யாக வழங்கி வருகின்றார்.

அதன் பயனாக 2020 மார்ச்சில் ஆரம்பமான இத்தொற்றின் முதலா வது அலையை மிகவும் குறுகிய காலப்பகுதியில் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வர முடிந்ததோடு, நாட்டில் இயல்புநிலையும் ஏற்படுத் தப்பட்டது. இத்தொற்று நாட்டின் மேல் மாகாணம் உள்ளிட்ட சில மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு சென்றடைவ தும் கூட கட்டுப்படுத்தப்பட்டது. அத்தோடு இத்தொற்றுக்கு உள்ளான வர்களின் எண்ணிக்கையையும் உயி ரிழப்புகளையும் மட்டுப்படுத்திக் கொள்ளவும் முடிந்தது.

இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப் படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப் பும் பங்களிப்பும் இன்றியமையாத தாகும். இருப்பினும் இத்தொற்றின் முதலாவது அலை ஜூன், ஜூலை யாகும் போது பெருவீழ்ச்சிக்கு கொண்டு வரப்பட்டதும் இத் தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார பழக்கவழக்கங்கள் தொடர் பில் மக்கள் மத்தியில் கவனயீனமும் அசிரத்தையும் அதிகரித்தன. அதன் விளைவாக 2020 ஒக்டோபர் முதல் வாரமாகும் போது திவுலப்பிட்டிய, மினுவாங்கொடையை அடிப்ப டையாகக் கொண்டு இத்தொற்றின் இரண்டாவது அலை தோற்றம் பெற்றது. அதுவும் கடும் உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புகளுடன் 2021 பெப்ரவரியாகும் போது பெருவீழச் சிக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆனால் கடந்த சிங்கள, தமிழ் புத் தாண்டு காலப்பகுதியில் மீண்டும் மக்கள் மத்தியில் இத்தொற்றுக்கான தவிர்ப்பு தொடர்பில் கவனயீனங் களும் அசிரத்தைகளும் மீண்டும் அதிகரித்தன. அதன் விளைவாக மூன்றாவது அலை தலைதூக்கியது. என்றாலும் இத்தொற்றை வெற்றி கரமாக பெருவீழ்ச்சி நிலைக்குக் கொண்டு வருவதற்கான தலைமைத் துவத்தையும் வழிகாட்டல்களையும் மருத்துவ நிபுணர்களின் ஆலோச னைகளுடன் ஜனாதிபதி வழங்கி னார். இதன் நிமித்தம் சுகாதார வசதி களை மேம்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் விரிவாக மேற் கொள்ளப்பட்டன.

அதேநேரம் இத்தொற்றைக் கட் டுப்படுத்துவதற்காக முன்னெடுக் கப்படும் நடவடிக்கைகளால் மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக் கைகளும் ஜனாதிபதியின் ஆலோ சனைக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட் டன. குறிப்பாக வருமானம் குறைந்த மற்றும் வறிய குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா மாதாமாதம் நிவா ரணம் வழங்கப்பட்டது. அத்தோடு ஏனைய தொழில் துறையினர் அடங் கலாக அனைத்துத் தரப்பினருக்கும் பல்வேறு நிவாரணங்களும் சலுகை களும் அளிக்கப்பட்டன. அனைத்து நடவடிக்கைகளும் மக்களின் நலன் களை முன்னிலைப்படுத்தியே முன் னெடுக்கப்பட்டன. அந்த வகையில் தான் பயணக் கட்டுப்பாடும் நடைமு றைப்படுத்தப்பட்டன.

இவை இவ்வாறிருக்க, இத்தொற் றைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி தான் சிறந்த தீர்வு என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது. இஸ்ரேல், அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் இத்தடுப்பூசியினால் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண் டிருந்தன. இந்நிலையில் இந்நாட்டு பிரஜைகளுக்கும் விரைவாகத் தடுப் பூசி பெற்றுக் கொடுப்பதற்கான நடவ டிக்கைகளும் விரிவான அடிப்படை யில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த அடிப்படையில் 2021.01.29 முதல் இற்றை வரையும் நாட்டில் பெரும் பகுதியினருக்கு இத்தடுப் பூசி பெற்றுக் கொடுக்கப்பட்டுள் ளது. இதன் பயனாக 2021 செப்டம் பர், ஒக்டோபராகும் போது நாடு கட்டம் கட்டமாக இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டது. அத்தோடு உல்லாசப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தருவதற்கு ஏற்ப ஏற்பா டுகளும் மேற்கொள்ளப்பட்டன. ரஷ்யா, உக்ரைன், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து பெரு மளவிலான உல்லாசப் பயணிகள் வருகை தர ஆரம்பித்தனர்.

கொவிட் 19 தொற்றின் பரவுத லைக் கட்டுப்படுத்துவதற்கு முன் னெடுத்த முடக்கம் உள்ளிட்ட நட வடிக்கைகளின் விளைவாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதி முதல் நாடு பொருளாதார நெருக் கடிக்கு முகம் கொடுக்க ஆரம்பித் தது. ஆன போதிலும் பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்தி லும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்பொருளாதார நெருக்கடியானது, நாட்டு மக்களுக்கு சுமையாக அமை வதைத் தவிர்ப்பதற்கு முன்னுரிமை அளித்து ஜனாதிபதி தலைமையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

ஆகவே கொவிட்19 தொற்றின் அச்சுறுத்தலை கட்டுப்படுத்தியது போன்று இப்பொருளாதார நெருக் கடியையும் ஜனாதிபதி தணித்து கட்டுப்படுத்தி சுபீட்சம் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை மக்கள் மத் தியில் உள்ளது.

கொவிட் தொற்று பிடிக்குள் முழு உலகமும் அகப்பட்டிருந்த வேளையில், நாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்காக செயல்திறனுடன் திட்டங்களை முன்னெடுத்தவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை உலக நாடுகளுக்கு நிகராக இலங்கையிலும் ஆரம்பித்தமை மிகப்பெரும் சாதனை

இன்றைய பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அனுபவிக்கும் சிரமங்களைத் தணிப்பதற்கும் ஜனாதிபதியினால் திட்டங்கள்

இலங்கைக்கு 292 ஓட்டங்கள் வெற்றி இலக்கு

இலங்கை அணிக்கு எதிரான 3 ஆவது ஒரு நாள் ஆட்டதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்ளை பெற்று இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 292 ஓட்டங்களை நிர்ணயித்தது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி அணியின் தலைவர் தனது அணி துடுப்பெடுத்தாடும் என்பதற்கு அமைவாக அவ் வணிக்கு வேர்னர் மற்றும் அணியின் தலைவர் பின்ஞ்ச் இருவரும் களமிறங்கினர்.வோர்னர் 9 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் அணியின் தலைவருடன் இணைந்தார் மிச்சல் மார்ஷ் அவரும் அடித்து ஆடுவார் என்ற நிலையில் 10 ஓடடங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் தலைவர் பின்ஞ்சுடன் லபுகேர்ன்ஸ் அவரும் தனது பங்கிற்காக 29 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார். பின்னர் விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் கேரி இணைந்தார் அவரும் நன்றாக ஆடிய வேளை அணியின் தலைவர் பின்ஞ்ச் 62 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் ரவிஸ் ஹெட் இணைந்து சிறப்பாக ஆடிய வேளை கேரி 49 ஓட்டங்கள் பெற்றிருந்த தனது அரைச் சதம் பெறமுடியாமல் ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் ஹெட்டுடன் இணைந்தார் மெக்ஸ்வெல் அவரு வந்த வேகத்தில் தனது பங்கிற்கு 18 பந்துகளை எதிர் கொண்டு 33 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் கமருன் கிரீன் ஹெட்டுடன் இணைந்து அதிரடியாக ஓட்டங்களை குவித்து 65 பந்துகளை எதிர்ககொண்டு 70 ஓட்டங்களையும் கிரீன் 15 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களை பெற்றது.

பந்து வீச்சில் ஜெப்ரி வென்டர்சே 3 விக்கெட்டுக்களையும் துஷ்மந்த,வெல்லாலகே,தனஞ்ச டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இலங்கை ஆறாவது முறையாக நாணயச் சுழற்சியில் தோல்வி

இலங்கைக்கு எதிரான இந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் தொடர்ந்து ஆறாவது முறையாக நாணயச் சுழற்சியல் வென்றார்.

இந்த வாய்ப்பின் மூலம், அவிஸ்திரேலிய அணியின் தலைவர் இதுவரை விளையாடிய மூன்று ஒருநாள் போட்டிகளிலும் நாணயச்சுழற்சியில் வென்றார் மற்றும் இது தவிர மற்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கையை துடுப்பெடுத்தாட அழைத்தார். இப் போட்டியிலும் வனிந்து ஹசரங்க விளையாவில்லை. கடந்த போட்டியில் இன்னிங்ஸை ஆரம்பித்த தனுஷ்க குணதிலக்க உபாதைக்கு உள்ளானதன் காரணமாக அவர் இப் போட்டியில் ஆட வில்லை நிரோஷன் டிக்வெல்ல அணியில்இணைத்துக் கொள்ளப்பட்டார்.

டிக்வெல்ல அணியில் வர அவருக்கு விக்கெட் காப்பாளராக செயற் படுவார். குசல் மெண்டிஸ் விக்கெட் காப்பாளராக செயற்பட மாட்டார் என நிர்வாகம் அறிவித்தது.நிரோஷன் டிக்வெல்ல ஒரு வருடமாக ஒருநாள் போட்டிகளில் விளையாட வில்லை.

மே 28, 2021 அன்று மிர்பூரில் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் விளையாடிய பிறகு டிக்வெல்ல ஒருநாள் அணியைப் பிரதிநிதித்துவப் படுத்துவது இதுவே முதல் முறை. எஸ்எஸ்சி மைதானத்தில் அவுஸ்திரேலியா 'ஏ' அணி க்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது அதிகாரபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் டிக்வெல்ல 83 ஓட்டங்கள் எடுத்ததே தேர்வாளர்களின் கவனத்திற்கு முக்கிய காரணமாக இருந்தது. இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி மூன்று மாற்றங்களைச் செய்துள்ளது. முந்தைய ஆட்டத்தில் ஆடிய ஸ்டீவன் ஸ்மித், இனி வரும் போட்டிகளில் விளையாடமாட்டார், அவருக்குப் பதிலாக மிட்செல் மார்ஷ் 3வது துடுப்பாட்ட வீரராக களமிறங்கினார்.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் சகலதுறை ஆட்டக்காரர் கமரூன் கிரீன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் நம்பர் 8ல் இருந்து துடுப்பெடுத்தாட திட்டமிட்டுள்ளார் மற்றும் ஜே ரிச்சர்ட்சன் மீண்டும் தொடக்க லெவன் அணியில் இடம்பிடித்துள்ளார். மிட்செல் ஸ்வெப்சன் மற்றும் கம்மின்ஸ் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

நிரோஷன் திக்வெல்ல, சரித் அசலன்க, பெதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், துனித் வெல்லாலகே, தனன்ஞய டி சில்வா, தசுன் ஷானக்க (அணித்தலைவர்), ஜெப்ரி வண்டர் செய், சாமிக்க கருணாரட்ன, துஷ்மன்த சமீர, மஹீஷ் தீக்ஷன

ஆரோன் பின்ச் (தலைவர்), டேவிட் வோர்னர், மிஷெல் மார்ஷ், மார்னஸ் லபச்சேனே, அலெக்ஸ் கெரி (விக்கெட் காப்பாளர்), டிராவிஸ் ஹெட், கிளென் மேக்ஸ்வெல், கமருன் கிரீன், ஜை றிச்சர்ட்சன், மெதிவ் குஹ்னமேன், ஜோஷ் ஹேசல்வூட்

இச் செய்தி அச்சுக்கு போகும் வரையான தகவலே இவை

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :.....
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :.....
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :.....
வாக்களித்தவர் பெயர் :.....
முகவரி :.....
மொபைல் இல. :.....

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 25-06-2022 இல. 13

கல்குடா பிரிமியர் லீக் கிரிக்கெட் அல் – இஹ்ஸான் விளையாட்டு கழகம் சம்பியன்

07 வது முறையாக ஆரம்பிக்கப்பட்ட கல்குடா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதிப்போட்டி கடந்த (14.06.2022) ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் இடம் பெற்றது கல்குடா பிரீமியர் லீக் கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதியாட்டத்தில் வாழைச்சேனை அல் – ஹக் மற்றும் பதுரியாமாஞ்சோலை அல் – இஹ்ஸான் விளையாட்டு கழகம்கள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அல் இஹ்ஸான் விளையாட்டு கழக தலைவர் ரியாஸ் முதலில் துடுப்பெடுத்தாத தீர்மனித்தார் அந்த வகையில் 20 ஓவர்கள் முடிவில் அல் இஹ்ஸான் 8 விக்கட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் அஸ்பர் அதிகபட்சமாக 36 (31), முபீன் 32 (16), றியாஸ் 23 (11) ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன், பந்து வீச்சில் அல் ஹக் அணியின் சார்பாக அமீனுத்தீன் 23/2, சஜ்மி 36/2 ஆகியோர் தலா 2 விக்கட்டுக்களையும் பைறூஸ் 25/1 என ஒரு விக்கட்டையும் கைப்பற்றி இருந்தனர்.

170 எனும் கடின ஓட்ட இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அல் – ஹக் அணி 16 ஓவர்கள் முடிவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. அல்ஹக் அணி சார்பாக இஸ்ஸத் 46 (26), சஜ்மி 21 (9), அமீனுத்தீன் 14 (14) ஓட்டங்களைப் பெற்றதுடன், பந்து வீச்சில் பிர்னாஸ் 13/3, அஸ்பர் 14/2, அல் – அமீன் 21/2 என விக்கெட்டுக்களைக கைப்பற்றி அல் – இஹ்ஸான் அணியின் வெற்றிக்கு வித்திட்டனர். இதன் மூலம் பி 2022 ம் ஆண்டின் 07 வது கல்குடா பிரிமியர் லீக் போட்டித்தொடரின் சம்பியனாக பதுரியாமாஞ்சோலை அல் இஹ்ஸான் விளையாட்டு கழகத்தினர் மகுடம் சூடிக்கொண்டனர் மேலும் வாழைச்சேனை அல் – ஹக் விளையாட்டு கழகத்தினர் 02 ம் இடத்தை பெற்றுக்கொண்டனர்.

வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இந்த போட்டித்தொடரில் இந்த வருடம் மொத்தமாக 24 அணிகள் பங்கு பற்றின இந்த போட்டித்தொடரில் இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கிவைத்தார்.

சாய்ந்தமருது சீ பிரீஸ் நிறுவனத்தினால் ஸாஹிரா கல்லூரி உதைபந்தாட்ட அணிக்கான மேலங்கி வழங்கி வைப்பு

சவளக்கடை குறூப் நிருபர்

பாடசாலைக்கு தேவையாக இருந்த உதைபந்தாட்ட அணிக்கான மேலங்கி சாய்ந்தமருது சீ பிரீஸ் நிறுவனத்தினால் அனுசரனையில் வழங்கப்பட்டது. மேற்படி மேலங்கியை அறிமுகப்படுத்தி உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் அலுவலகத்தில் பாடசாலை அதிபர் ஜாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது சீ பிரீஸ் நிறுவனம் சார்பாக ஆதம்பாவா சிராஜ் , பாடசாலையின் அதிபர் ஜாபிர் ,பிரதி அதிபர் அபூபக்கர், விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் அமீர், ஒழுக்காற்றுசபை தலைவர் ஆசிரியர் இப்றாஹீம், விளையாட்டு துறை ஆசிரியர்களான அப்ராஜ் ரிலா, ரஜீப், ரகீப், ஜெமீன் மற்றும் பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஜப்ரான் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை உதயபுரம் எவர் கிறீன் விளையாட்டுக் கழகத்திற்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான ஐ.எல்.எம்.மாஹிர் விளையாட்டு உபகரணம் வழங்குவதையும், இதில் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ், எவர் கிறீன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் டி.மதன், விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் உள்ளிட்டவர்களை படத்தில் காணலாம்.

(படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

முல்லைத்தீவு, புதுமாத்தளன் மக்களுக்கு இராணுவம் உலர் உணவு வழங்கல்

மேஜர் ஜெனரல் சஞ்ஜய வனசிங்கவின் ஏற்பாட்டில் முன்னெடுப்பு

ஸாதிக் ஷிஹான்

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களுக்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ், நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக அண்மையில் புதுமாத்தளன் றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியின் போது சிறுவர்கள் மற்றும் வசதி குறைந்த குடும்பங்கள் பலருக்கு சத்துணவுகள் மற்றும் உலர் உணவுகள் விநியோகிக்கப்பட்டன.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சஞ்ஜய வனசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் அவரது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், புதுமாத்தளன் பாடசாலையின் 41 மாணவர்களுக்கு மேலதிக உணவு வழங்கப்பட்டதுடன் பிரதேசத்திலுள்ள 350 குடும்பங்களுக்கு உலர் உணவுகள் விநியோகிக்கப்பட்டன.

மேஜர் ஜெனரல் சஞ்ஜய வனசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நன்கொடையை களுத்துறை சனரக்ஷக பலமண்டலய வழங்கியுள்ளது. இதற்கு தலகல ஸ்ரீ சித்தார்த்த அறக்கட்டளை மற்றும் சிங்கப்பூரின் டான் ங்காக் என்ட் கீ மெங் லாங் பவுண் டேஷன் லிமிடெட் ஆகியவற்றால் அனுசரணை வழங்கப்பட்டுள்ளது. , மாத்தளை ஃபிட்னஸ் பிளேஸ் மற்றும் ஜேஎஸ்பிசிஎல்எல்சி துபாய் (பிரைவேட்) லிமிட்டெட் ஆகியவை மாணவர்களுக்கான சத்துணவை ஆறு மாத காலத்திற்குத் தொடர்ந்து வழங்க திட்டமிட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் சஞ்ஜய வனசிங்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இராணுவத்தில் இணைந்து சேவையாற்றும் பெண் இராணுவ வீரர்களின் கரங்களினால் இந்த உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை இந்த நிகழ்வின் விசேட அம்சமாகும்இந்நிகழ்வில் 68 ஆவது படைப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் படையினர், 682 ஆவது காலாட்படை படையணி, 3ஆவது விஜயபா காலாட்படை படைப் பிரிவு மற்றும் 6 ஆவது இலங்கை தேசிய காவலர்கள், அனுசரணையாளர்கள், கல்லூரி அதிபர் மற்றும் கிராம மக்கள் கலந்துகொண்டனர்

யாழில் இருந்து திருச்சிக்கு விமான சேவை; விரைவில் கப்பல் சேவை

அமைச்சர் டக்ளசின் தொடர் முயற்சிக்கு வெற்றி

யாழ்ப்பாணம் திருச்சிக்கு இடையிலான விமான சேவை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட வுள்ளதோடு விரைவில் பாண்டிச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக்கு சரக்கு கப்பல் சேவையையும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்தியாவிலிருந்து கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக போக்குவரத்து சேவையை முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரஸ்தாபித்திருந்தார். இந் நிலையில், பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா மற்றும் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ் இந்திய துணைத்தூதர், யாழ் அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகள் பலர், நிலைமைகளை நேரில் ஆராய்ந்தனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான கடுகதி புகையிரதத்தில் வருகைதந்திருந்த கப்பல் மற்றும விமானப் போக்குவரத்துக்கான துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பொன்னாடை போர்த்தி வரவேற்றிருந்தார்.

இதையடுத்து குறித்த இரு அமைச்சர்களும் குறித்த பகுதிகளுக்கான கள விஜயத்தை மேற்கொண்டிருந்தனர். முன்பதாக இந்தியாவின் பாண்டிச்சேரி உள்ளிட்ட துறைமுகங்களுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து மற்றும் பலாலி - திருச்சி இடையிலான விமானப் போக்குவரத்து போன்றவற்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தொடர் முயற்சிகளில் ஈடுபட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இறுதியாக நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் குறித்த விடயத்தினை பிரஸ்தாபித்திருந்தார்.

குறித்த சேவைகளை செயற்படுத்துவதன் மூலம், மண்ணெண்ணை, டீசல் போன்ற எரிபொருட்களையும், மருந்துப் பொருட்கள், பால்மா, உர வகைகள் உட்பட்ட அத்தியாவசிப் பொருட்களை இந்தியாவில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு எடுத்து வந்து நியாயமான விலையில் தேவையானளவு மக்களுக்கு கிடைப்பதற்கான சூழல் உருவாக்க முடியும் என்ற கருத்தினையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாக வலியுறுத்த வந்திருந்தார். இதையடுத்து குறித்த செயற்பாட்டை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயுமாறு கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து காங்கேசன் துறை மற்றும் பலாலி விமான நிலையத்தை பார்வையிட்டார்.

அத்தியாவசிய சேவைகளை வழங்க குடும்ப அட்டை அறிமுகம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு குடும்ப அட்டை முறையினை அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள 14பிரதேச செயலங்களிலும் இவ்வட்டை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவித்தார்.

இதுபற்றி மக்களுக்கு தெளிவு படுத்தவதற்காக ஊடகங்களுக்கு சனிக்கிழமை (18) கருத்து தெரிவிக்கையில் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஒவ்வோரு பிரதேச செயலகங்களுக்கும் ஒவ்வோரு வர்ணங்களில் இவ்வட்டை அறிமுகப்படுத்தப்பட்டு இதன் மூலமாக அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கிடைக்கின்ற அத்தியாவசிய பொருட்களை சகலருக்கும் கிடைக்கின்ற வகையில் பங்கிடு செய்வதற்கு வசதியாகவு ஒரு குடுப்பத்தில் யாராவது ஒருவர்மட்டும் அட்டையினை பயன்படுத்தவும் எரிவாய்வு என்றால் ஒருமாதத்திற்கு ஒன்று என்ற வகையிலும் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் மண்ணெண்ணை குறித்த அளவிலும் வழங்குவதற்கு என நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு பிரதேச செயலகத்தின் நபர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரம் தங்களின் எரிபொருளை கொள்வனவு செய்ய முடியும் எனவும் இந் நடைமுறையானது எதிர்வரும் வாரங்களில் நடைமுறைக்கு வரும் என எதிர்பாக்கப்படுகின்றது. மக்கள் எரிபொருள் தீர்ந்து விடும் என்ற அச்சத்தில் இரவு வேளைகளில் தங்களின் வாகனங்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிறுத்திவிட்டு அதிகாலையில் வந்து மணித்தியாலங்களாக காத்திருக்க இனி தேவை இருக்காது எனலாம்.

கிழக்கின் குரல்

மோசமான முகாமைத்துவம் காரணமாக

பல்லாயிரக்கணக்கான மருந்துகள் பாவனைக்கு தகுதியற்றவை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் றிபாஸ்

நாட்டின் நிலையில் மருந்துத்தட்டுப்பாடு அரச வைத்தியசாலைகளுக்கு மட்டுமல்ல பாமசிகளுக்கும் இருக்கிறது. பாமசிகளில் இல்லாத நிறைய மருந்துகள் அரச வைத்தியசாலைகளிலும், களஞ்சியசாலைகளிலும் இருக்கிறது. எல்லா விடயங்களுக்கும் நாம் அரசியல்வாதிகளை குற்றம் சாட்டுகிறோம். ஆனால் அரச அதிகாரிகளே இந்த விடயங்களுக்கு பெரும்பாலும் பொறுப்பானவர்கள் என்பது எனது கருத்து. அண்மையில் வெளியான அறிக்கையின் படி 6692 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் களஞ்சியங்களில் பாவனைக்கு தகுதியற்றதாக அடையாளம் கண்டு எப்படி அவற்றை அழித்துவிடுவது என்பது பற்றி தெரியாமல் இருக்கிறது. எமது பகுதியில் (கல்முனை பிராந்தியத்தில்) மட்டும் தகுதி இழந்த ரூ.12.8 மில்லியன் பெறுமதியான மருந்துகள் இருப்பதுடன் காலாவதியான மருந்துகளும் 40 மில்லியன் ரூபா அளவில் இருக்கிறது. யார் இதற்கு பொறுப்பு கூறுவது. அரசாங்கத்தை மட்டும் குறைகூறிக்கொண்டிருந்தால் இதற்கு வகை சொல்வது யார்? இது யாரின் வரிப்பணம்? இந்த வீண்விரயத்திற்கு யார் பொறுப்பு கூறுவது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் கேள்வியெழுப்பினார்.

பாமசி உரிமையாளர்களுக்கு கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவிக்கையில், இந்த மருந்து வீண்விரயங்களும், காலாவதி பிரச்சினைகளும், தர நிர்ணய பிரச்சினைகளுக்கும் தனியார் பாமசிகளுக்கு அதிகமாக ஏன் வருவதில்லை ஏனென்றால் அது சொந்தப் பணம் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு இருப்பதே காரணம். இந்த நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு காரணம் அரசியல்வாதிகள் மட்டுமல்ல. அரசாங்கம் என்பது அரசியல்வாதிகள் கிடையாது. அதிகாரிகள் தான் அரசாங்கம். இந்த நாட்டின் சீரழிவுக்கு நாமும் பொறுப்பு என்பதை நாம் உணர வேண்டும். நாம் பொறுப்புணர்வில்லாமல் செய்த ஒவ்வொரு செயலும் இந்த நாட்டின் சீரழிவுக்கு காரணமாக அமைந்துள்ளது என்றார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப்பிரிவின் பரிசளிப்பு விழா

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவைப் பிரிவு அகில இலங்கை ரீதியாக நடத்திய கவிதை, சிறுகதைப் போட்டிகளில் தெரிவானவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் முஸ்லிம் சேவைப் பிரிவு கட்டுப்பாட்டாளர் ரினோசியா ஜவ்பர் முன்னிலையில் ஆனந்த சமரக்கோன் கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இதன்போது "இந்தியாவில் சாதனை படைத்த முஸ்லிம்களின் வரலாறு" என்ற புத்தகத்தை புரவலர் ஹாஷிம் உமர் கூட்டுத்தாபனத் தலைவரிடம் கையளிப்பதையும் தலைவர் ஹட்சன்சமரசிங்க, முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப், கூட்டுத்தாபன நிகழ்ச்சி தயாரிப்புப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் மயூரி அபேசிங்க ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். கூட்டுத்தாபன தமிழ் பிரிவு ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் வெற்றிபெற்ற ஒருவருக்கு பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் கலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு கல்வி வலயம்...

(03ஆம் பக்கத் தொடர்)

தொடர்பில் தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பொன்று நேற்றையதினம் கல்வி யமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் சூம்தொழில்நுட்பம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அமைச்சர் அது தொடர்பில் இதன்போது மேலும் தெரிவிக்கையில். கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக இந்த வருடத்தில் மேல்மாகாண பாடசாலை களின் மாணவர்கள் நூறு நாட்கள் தமக்கான கல்வியை இழக்க நேரிட்டது.

அதேபோன்று ஏனைய பிரதேச மாணவர்கள் 77 நாட்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை இழக்க நேரிட்டது. அதேபோன்று கடந்த வருடத்தில் மேல் மாகாண பாடசாலை மாணவர்கள் 127 நாட்களையும் ஏனைய பிரதேச மாணவர்கள் 86 கல்வி கற்கும் நாட்களையும் இழக்க நேரிட்டது. கல்வி அமைச்சர் என்ற வகையில் மாணவர்களின் கல்விக்கான தினங்களை குறைப்பதற்கோ தாமதப்படுத்துவற்கோ எந்த வகையிலும் இடமளிக்க முடியாது. அதனைக் கருத்திற்கொண்டே பாடசாலைகள் மூடப்படும் இந்த வாரத்தில் ஒன்லைன் மூலமான கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

முடிந்தளவில் கால அட்டவணையை தயார் செய்து கொண்டு அதனை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு கொழும்பு கல்வி வலயம் மற்றும் ஏனைய மாகாணங்களிலுள்ள நகர்ப்புற பாடசாலைகளை மூடுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்தது.

அதேவேளை ஏனைய பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் அந்தந்த மாகாண கல்வி அதிகாரிகள் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

மாணிக்கக்கல் வர்த்தகர்...

(03ஆம் பக்கத் தொடர்)

காலமானார். பேருவளை மருதானை முஹம்மத் அல்பாஸி அரபுல் கல்லூரியின் முன்னாள் பொருளாளரான இவர், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம், பேருவளை அப்ரார் கல்வி நிலையம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினருமாவார். அவர் பல்வேறு அமைப்புகளினூடாக பாரிய கல்வி, சமய, சமூகப் பணிகளை செய்து பிரதேச மக்களின் நன்மதிப்பினைப் பெற்றுக் கொண்டார்.

பேருவளை மருதானையில் பிரபல வைத்தியப் பரம்பரையில் பிறந்த மர்ஹூம் ஸவாஹிர் ஹாஜியார், முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்கார், பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உட்பட பல அரசியல்வாதிகளுடன் இணைந்து மருதானைப் பகுதியை கட்டியெழுப்ப பல தசாப்த காலமாக உழைத்தார்.

அன்னாரின் திடீர் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பென பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தனது அனுதாபச் செய்தியி்ல் தெரிவித்துள்ளார். ஷாதுலிய்யா தரீக்காவின் மூத்த இஹ்வானான அன்னாரின் ஜனாஸா நேற்று (19) ஞாயிற்றுக் கிழமை மாலை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், அரசியல்வாதிகள் பெருமளவிலான பொது மக்கள் பங்குபற்றினர்.

ஜனாதிபதியுடன் ஆளும்...

(03ஆம் பக்கத் தொடர்)

திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மாளிகையில் இன்று மாலை 5.00மணியளவில் நடைபெறவுள்ள இந்த பேச்சுவார்த்தைக்கு அனைத்து அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலைமை காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் இங்கு முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதுடன் அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் இங்கு ஆராயப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் உத்தேச 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துமாறு இதன்போது ஆளும் கட்சியினர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஸ)

சர்வதேச அமைப்புகளுடன்...

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்கு பேரவை மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட உள்ளூர் பொறிமுறைகளினால் நாட்டில் எட்டப்பட்டுள்ள பெறுபேறுகளையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விரிவாக விவரித்தார். இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக உயர்ஸ்தானிகருக்கு முன்னர் விடுக்கப்பட்ட அழைப்பு இன்னும் அப்படியே இருப்பதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

தற்போதைய அமர்வின் ஆரம்பத்தில் உயர்ஸ்தானிகர் அறிவித்தமைக்கு அமைய, அவரது நிறைவான ஓய்விற்காக வாழ்த்துக்களைத் தெரிவித்தார். சீனாவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சென் சூ உடனான இருதரப்பு சந்திப்பின் போது,நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள், குறிப்பாக வெளிநாட்டு இருப்புக்கள் மற்றும் உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் அவற்றின் தாக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய பேராசிரியர் பீரிஸ், கோவிட்19 ஐ எதிர்த்துப் போராடுவதற்காக சீனா அனுப்பிய கணிசமான அளவிலான உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் தடுப்பூசிகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட நட்புறவுகள் மற்றும் எதிர்காலத்தில் உறவை மேலும் வலுப்படுத்தும் எதிர்பார்ப்பு குறித்தும் குறிப்பிடப்பட்டது.

வாரத்திற்கு இரு தடவைகள்...

தெரிவித்தார். பொலிஸ், பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக பட்டியல் தயாரிக்கப்பட்டு முச்சக்கர வண்டி சாரதிகளின் நாளாந்த எரிபொருள் தேவைக்கு ஏற்ப எரிபொருள் வழங்கும் வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த வாரம் முதல் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும், அதற்கான முச்சக்கர வண்டிகளின் பட்டியல் தாயரிக்கப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். எனினும், நாளாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எதிர்வரும் மூன்று தினங்கள் எரிபொருள் விநியோகம் நடைபெறாது எனவும் 23 ஆம் திகதி முதல் வழமை போன்று விநியோகம் இடம்பெறும் எனவும் எரிசக்தி மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் டீசல் மற்றும் பெட்ரோலுடன் இரண்டு கப்பல்கள் வந்தடையவுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதற்காக 90 மில்லியன் டொலருக்கான கடன் பத்திரம் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ரேஷன் திட்டத்தின் கீழ் எரிபொருளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தை விரைந்து செயற்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோக திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி முச்சக்கர வண்டிகள், தனியார் பேருந்துகள், பாடசாலை போக்குவரத்து வாகனங்கள், அலுவலக பணியாளர்கள் போக்குவரத்து வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. அத்தோடு கொள்கலன் போக்குவரத்து வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அது தொடர்பில் தெரிவித்துள்ள அமைச்சர், பொதுமக்கள் எதிர்வரும் மூன்று நான்கு தினங்களுக்கு எரிபொருளுக்காக வரிசையில் காத்து நிற்க வேண்டாம் என்றும் அத்துடன் அவசியமற்ற பயணங்களுக்காக எரிபொருளை பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். அதேவேளை தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு அரசாங்க ஊழியர்கள் வீடுகளிலிருந்து கடமைகளை மேற்கொள்வது போன்று தனியார் துறையினரும் வீட்டிலிருந்து கடமைகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்: அத்தியாவசிய சேவைகள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் போன்று தமது வாழ்வாதாரத்திற்காக எரிபொருளை நம்பியிருக்கும் அனைவருக்கும் எரிபொருள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் தனியார் பஸ் வண்டிகள், பாடசாலை போக்குவரத்து வாகனங்கள், சுற்றுலாத் துறை சார்ந்த வாகனங்கள் ஆகியவற்றுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அத்தகைய வாகனங்கள் அருகிலுள்ள இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் இருபத்தி நான்கு மணித்தியாலங்களும் தமக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த வாரம் முதல் வெள்ளிக் கிழமைகளில் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ)

ஒமானிலிருந்து ஒரு இலட்சம்...

ஓமான் நாட்டிலிருந்து மேற்படி எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த நிறுவனத்துடனான உடன்படிக்கை தொடர்பில் முதற்கட்ட பேச்சுவார்த்தை நிறைவு பெற்றுள்ளதாகவும் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு இணங்க எதிர்வரும் நான்கு மாத காலப் பகுதிக்காக ஓமானில் இருந்து ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலமா சபை தலைவராக ...

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புதிய நிறைவேற்றுக் குழுத் தெரிவுக்கான மத்திய சபைக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கண்டி கட்டுகல ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது. இதன் போதே அவர் மீண்டும் தலைமை பதவிக்கு தெரிவானார். இந்த கூட்டத்திற்கு மத்திய சபை உறுப்பினர்களான 24 மாவட்டக் கிளைத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் உட்பட 103 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அஷ்ஷைக் எம். அர்கம் நூராமிதினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதோடு பொருளாளர் அஷ்ஷைக் ஏ.எல்.எம். கலீல் கணக்கறிக்கையை சமர்ப்பித்தார். பின்னர் தலைவர் உரை அஷ்ஷைக் முப்தி எம்.ஐ.எம் ரிஸ்வியினால் நிகழ்த்தப்பட்டது. இத்துடன் பழைய நிறைவேற்றுக் குழு கலைக்கப்பட்டது.

ஜம்இய்யா சட்டயாப்பின் பிரகாரம் அதனது நிறைவேற்றுக் குழு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஜம்இய்யாவின் மத்திய சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படல் வேண்டும்.மேற்படி தெரிவின் போது தற்காலிகத்தலைவராக அஷ்ஷைக் எம்.எல்.எம். இல்யாஸ் கடமையாற்றினார்கள். அவருக்கு உதவியாக அஷ்ஷைக் ஐ.எல்.எம். ஹாஷிம் ஷூரியும் கலாநிதி அஷ்ஷைக் ஏ. அஸ்வர் அஸாஹிமும் கடமையாற்றினார்கள். கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 30 பேர்கள் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் அவ்வாறே பதவித் தாங்குனர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக அஷ்ஷைக் முப்தி எம்.ஐ.எம். றிஸ்வியும் செயலாளராக அஷ்ஷைக் எம். அர்கம் நூராமிதும் பொருளாளராக அஷ்ஷைக் ஏ.ஏ. அஹ்மத் அஸ்வரும் தெரிவானதோடு உப தலைவர்களாக அஷ்ஷைக் எச். உமர்தீன், அஷ்ஷைக் எம்.ஜே. அப்துல் காலிக், உப தலைவர், அஷ்ஷைக் ஏ.எல்.எம் றிழா, அஷ்ஷைக் ஐ.எல்.எம் ஹாஷிம், அஷ்ஷைக் ஏ.எல்.எம் கலீலும் தெரிவானார்கள். உப செயலாளர்களாக அஷ்ஷைக் எம்.எஸ். எம் தாஸீம் ,அஷ்ஷைக் ஏ.ஸீ. எம். பாழில் ஆகியோர் தெரிவானதோடு உப பொருளாளராக அஷ்ஷைக் எம்.கே. அப்துர் ரஹ்மான் தெரிவு செய்யப்பட்டார். (பா)

அரச உத்தரவாத...

வழங்க வேண்டும் என அவர் ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அரசாங்கம் அண்மையில் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை அறிவித்தது. இதன்படி, ஒரு கிலோ நாடு அரிசி 220 ரூபாவிற்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 230 ரூபாவிற்கும், ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 260 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உச்சபட்ச சில்லறை விலையை விடவும் கூடுதல் தொகைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டுபிடிக்க நாடு முழுவதிலும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட உள்ளது. (பா)

இலங்கை விடயத்தில்...

வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இணைந்து செயல்படுவதோடு, அதன் கொள்கை பரிந்துரைகள் மிகவும் கடுமையான தன்மையை கொண்டுள்ளது. எனினும் அதற்கமைய இலங்கை செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் குறித்த செவ்வியில் வலியுறுத்தியுள்ளார்.

சட்டவிரோதமாக குடியேற ...

வசிக்கும் 16 வயதுக்குட்பட்ட 6 சிறுவர்கள் மற்றும் 35 பெரியவர்கள் இதில் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட அவுஸ்ரேலியப் படை வீரர்கள் அடங்கிய விமானத்தில், கிறிஸ்மஸ்தீவில் இருந்து இலங்கைக்கு குறித்த 41 பேரும் நாடு கடத்தப்பட்டனர். மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் நேற்று இரவு விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். நீர்கொழும்பு மேலதிக நீதவான் மர்லன் ஜயசூரிய முன்னிலையில் நேற்றிரவு ஆஜர்படுத்தப்பட்ட அவர்களில் 37 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபயவின்...

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளாக அறிய வருகிறது.

முன்னாள் அமைச்சரவை அமைச்சரான டி.ஏ.ராஜபக்ஷ அவர்களின் புதல்வரும் இலங்கையின் 5 வது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ 1949 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கல்வி கற்றதோடு , 1971 இல் இலங்கை இராணுவத்தில் இணைந்தார். தனது இராணுவ சேவையின்போது அவர் சென்னை பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புக் கற்கைகளில் முதுமாணிப் பட்டமொன்றைப் பெற்றதோடு பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் உயர்தரப் பயிற்சிகள் பெற்றார். யுத்தகாலத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கில் பல பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆணையிட்டு நடத்தினார். 1991 இல் லெப்டினன் கேர்னலாக இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில் நுட்பத்தைப் பயின்று அதன்பின்னர் ஐக்கிய அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தார். அங்கு கலிபோர்னிய, லொயலா சட்டக் கல்லூரியில் ஒரு தகவல் தொழில்நுட்ப தொழில்வாண்மையாளராகப் பணியாற்றி 2005 இல் இலங்கைக்குத் திரும்பினார்.

வரிசைகளில் உயிரிழந்த...

(03ஆம் பக்கத் தொடர்)

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே எரிபொருள் மற்றும் கேஸ் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் சகல பிரதேசங்களிலும் எரிபொருள் மற்றும் கேஸ் பெற நீண்ட வரிசை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.(பா)

ரஷ்யாவிடமிருந்து...

(03ஆம் பக்கத் தொடர்)

எதிர்வரும் சில தினங்களில் அவர்கள் ரஷ்ய தூதுவரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இலகு கடன் நிபந்தனை அடிப்படையில் இலங்கைக்கு எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் இந்த சந்திப்பின்போது வேண்டுகோள் விடுக்க உள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஸ)

எரிபொருளுக்காக ...

(03ஆம் பக்கத் தொடர்)

யுள்ளார். சமூக உணவு பகிர்வு அணியினருடன் இணைந்து எரிபொருள் வரிசைகளில் நிற்கும் மக்களுக்கு நேற்று மாலை பனிஸ் மற்றும் தேனீர் வழங்கியதாக ரொஷான் மஹாநாம தமது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

தந்தையும், மகனும்...

(03ஆம் பக்கத் தொடர்)

பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த தந்தையும், மகனும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எல்லை மீறும் ...

(03ஆம் பக்கத் தொடர்)

அனைத்து மக்களிடமும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதே வேளை குறைந்த பட்ச பலத்தை பிரயோகிக்குமாறு பொலிஸாருக்கு பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முல்லைதீவு ,அரநாயக்க,குருணாகல்,அதுருகிரிய உட்பட நாட்டின் பல பகுதிகளில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக அறிய வருகிறது.இதில் பாதுகாப்பு தரப்பினரும் பொதுமக்களும் காயமடைந்துள்ளனர். (பா)

இணையவழிக் கல்வி...

அத்துடன், நாட்டின் நெருக்கடி நிலைமையைக் கையாள்வதற்காக எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு நாடு மூடப்படவுள்ளதாகவும், இதனூடாக பாடசாலைகளும் மூடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கோட்டாபய – ரணில் அரசாங்கத்துக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாததாலேயே நாடு மூடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், நாட்டை மூடுவதற்கு பதிலாக அவர்கள் இருவரும் வீட்டுக்கு செல்ல வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

படையினர் பொதுமக்களிடையே...

அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முல்லைத்தீவு, விஸ்வமடு பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது போதையில் இருந்ததாக உறுதி செய்யப்பட்ட கும்பல் ஒன்று இராணுவத்தின் மீது கண்ணாடி போத்தல்கள் மற்றும் கற்களை வீசத் தொடங்கியதைத் தொடர்ந்து, நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட வேண்டியிருந்தது . மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இதன் மூலம் அங்கு ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்த முடிந்தது என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர் . இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக விஸ்வமடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

IMF ஐ முன்கூட்டியே...

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தடுத்திருக்கலாம். வெளியிலிருந்து உதவி கேட்க தாமதம் செய்தது தவறு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய தேவைக்கு...

தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், விரைவில் மேலும் இரண்டு எரிவாயுகப்பல்களை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக லிட்ரோ தெரிவித்துள்ளது. இந்த கப்பல்களில் ஒன்றிற்கான கட்டணம் அடுத்த இரண்டு நாட்களில் செலுத்தப்பட உள்ளதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பவுஸரிலிருந்து காருக்கு ...

இந்த சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்து அவர் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, பம்பலப்பிட்டி, மரைன் டிரைவ் வீதியில் எரிபொருள் ஏற்றிச் செல்லும் பவுஸர் ஒன்றிலிருந்து காருக்கு எரிபொருளை கலன்களில் வழங்கியமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஐஓசி அறிவித்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தை ...

நின்ற பெருமளவான மக்களுக்கு எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட போது அப்பகுதியில் திடீரென வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. வெடிப்பு சம்பவத்துடன் அப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அருகில் இருந்த மின்மாற்றியில் காகம் ஒன்று மோதியதில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த வெடிப்பு சம்பவம் ஏற்பட்டதாக தெரியவருகிறது. பின்னர், மின்சார சபை அதிகாரிகள் வந்து சரி செய்து மின் விநியோகத்தை சீரமைத்தனர். அதன்படி சுமார் அரை மணி நேரம் எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று முதல் பஸ்கள்..

தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மூலம் தனியார் பஸ்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் மூலம் தினமும் 8 லட்சம் லீட்டர் டீசலை தனியார் பஸ்கள் மற்றும் இ.போ.ச பஸ்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உறுதி மொழி வழங்கியுள்ளதாகவும் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று 50 வீத பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் அதேவேளை இந்த வாரத்திற்குள் 70 வீத பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வதற்கு பதிலாக முடியுமான அளவு பொது போக்குவரத்து சேவையை உபயோகிக்குமாறும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.(ஸ)

பல பிரச்சினைகளுக்கு ...

தெரிவித்தார். ஆகையினால், பதற்றமடையாமல் பொறுமையாக இருந்தால், எஞ்சியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றார்.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்ட நிலையில் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை சில வாரங்களுக்கு முன்னர் ராஜினாமா செய்தது. சர்வ கட்சி அரசாங்கம் அமைக்க எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் எவரும் முன்வராத நிலையில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றது தெரிந்ததே.

தேங்காய் விலை 200 ...

வேண்டியிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ள அவர், உரத்தை கொண்டு வருவதால் மட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது உற்பத்தி செலவு கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மாதமும் சுமார் 150 மில்லியன் தேங்காய்கள் உள் நாட்டில் நுகரப்படுகின்றன, மேலும் 100 மில்லியன் தேங்காய்கள் பதப்படுத்தும் தொழிலுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் இப்போது நெருக்கடி நிலையால் பதப்படுத்துவதும் ஏற்றுமதி செய்வதும் பாதிக்கப்பட்டுள்ளது என தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ஜயந்த சமரகோன் தெரிவித்துள்ளார்.

2022 O/L பரீட்சை...

தெரிவித்தார். சாதாரண தரப் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்ப சிக்கல் ஏற்பட்டுள்ளது. (பா)

IMF பிரதிநிதிகள் குழு ...

இந்நிலையில், மே 9 ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரையிலான முந்தைய மெய்நிகர் கலந்துரையாடலின் போது ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் ஏற்பாட்டின் மூலம் ஆதரிக்கப்படக்கூடிய பொருளாதார வேலைத்திட்டம் பற்றிய விவாதங்களைத் தொடரும் என்று இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழு தெரிவித்துள்ளது.

நாட்டு நிலமைகள் தொடர்பில் அவதானம் தேவை

வெலிகம தினகரன் நிருபர்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணங்களால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதனிடையே திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இது விடயமாக மக்கள் மிக கவனமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வீடுகளில் ஆண் துணையின்றி பெண்கள், சிறுவர்கள் தனிமையில் இருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் முன் வாயல்களை மூடிக் கொண்டுபாதுகாப்பாகஇருக்குமாறும் அறிமுகமில்லாதவர்கள் நடமாடுவதைக் கண்டால் உடன் பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறும் பொதுமக்கள் வேண்டப்படுவதோடு தமது வீட்டுப் பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

அண்மைக்காலங்களில் வெலிகம, பகுதியில் பல திருட்டுச்சம்பவங்கள் இடம்பெறுள்ளன. குறிப்பாக துவிச்சக்கர வண்டிகளின் திருட்டுக்கள் இப்பகுதியில் அதிகரித்துள்ளன.

மேலும் சிறுபிள்ளைகளையும் வெளியே செல்ல அனுமதிக்காமல் பெரியவர்களின் துணையுடன் பாதுகாப்பாக அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

மலேசியா தமிழ்ப்பள்ளி ஆசிரியருக்கு தமிழ்ச் செம்மல் விருது

மலேசியா நாட்டில் முப்பது ஆண்டுகளாக தமிழ்ப்பள்ளி ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் பணியாற்றிவரும் திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியன் தமிழகத்திற்கு சுற்றுப் பயணம் வருகை தந்ததை முன்னிட்டு திருச்சியில் நற்றமிழ் முல்லை தமிழ்ச் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஆசிரியர் மகேஸ்வரி சுப்பிரமணியனின் ஆசிரியர் பணியைப் பாராட்டி நந்தவனம் பவுண்டேசன் மூலம் கல்விச்செம்மல் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் வை. ஜவஹர் ஆறுமுகம் விருதினை வழங்க நந்தவனம் பவுண்டேசன் நிறுவனர் நந்தவனம் சந்திரசேகரன் வாழ்த்துரை வழங்கினார்.

நற்றமிழ் முல்லை தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் ரஞ்சனி நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைக்க கவிஞர் கோவிந்தசாமி உட்பட திருச்சியைச் சேர்ந்த பல தமிழ் அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

321

வெற்றிடங்கள்

தோட்டத்துறை

தோட்ட வேலை, தேயிலை கொழுந்து பறித்தல் மற்றும் தோட்ட வேலைகளிற்கு குடும்பமொன்று மற்றும் இரண்டு கங்காணிகள் தேவை. நீர், மின்சாரம் உண்டு. அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம். அழைக்கவும் 0773436200. 036525

A அல்லது O Kidney (சிறுநீரகம்) உடன் தேவை

அக்கரைப்பற்றைச் சேர்ந்த உயர்தரம் கல்வி கற்கும் 18 வயதுடைய மாணவி ஒருவருக்கு A அல்லது O வகையைச் சேர்ந்த சிறுநீரகம் (Kidney) உடன் தேவை. 30 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்டவர்களுடைய சிறுநீரகம் சிறந்தது.

தொடர்புகளுக்கு 0776316825 - 0754327615

Repeat Your Ad For Better Offers

Repeat Your ad For Better Offers

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

எனது இல: ELDS/LND/04/comm/2016/05-II

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/5/2016/HA/55

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2022 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 06ஆம் திகதிய 2274/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் (III)ஆம் பகுதியை பார்க்கவும்.

அட்டவணை

பிரதேச செயலாளர் பிரிவு : எலபாத

கிராமம் : எலபாத

இடம் : சப்ரகமுவ மாகாணம் இரத்தினபுரி மாவட்டம், எலபாத பிரதேச செயலாளர் பிரிவு நவதுன்கோறலே பல்லேபத்துவே இலபாத கிராம உத்தியோகத்தர் பிரிவு (இல. 185) எலபாத கிராமத்தில் அமைந்துள்ள.

காணியின் பெயர் : உடுமுல்லகஹஹேன கட்டுகிதுலஹேன, இம்புல்கலஹேன்யாய, கெட்டதெல்கஹதெனிய.

ஆரம்ப வரைபட இல. : இ.கி.வ. 75, பிற்சேர்க்கை இல. 39, தாள் இல. 39 உடைய வரைபடம்

துண்டு இல. : 326, 327, 328, 329

பிரதேச செயலாளர்

2022.06.17 எலபாத பிரதேச செயலாளர் பிரிவில்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெருந்தோட்ட அமைச்சு

சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

2022 ஆம் ஆண்டுக்காக பொலிப்ரொப்லீன் (Polypropylene) பைகளின் வழங்கலுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

பெலவத்த பிரிவுக்கு 2022 ஆம் ஆண்டுக்காக பொலிப்ரொப்லீன் பைகளின் வழங்கலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கீழுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2022 ஜூலை 7 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

வ/ இல.	உருப்படி	தேவையான அளவு	மீளளிக்கப்படாத வைப்பு ரூபா	விலைமனு பிணை ரூபா	குறிப்பு இல.
	பொலிப்ரொப்லீன் பைகள்				
01	பெலவத்த பிரிவு	275,000	15,000.00	1,000,000.00	PR 11910

2. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2022 ஜூலை 8 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது அல்லது விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குறிப்பு இலக்கத்துடன் 2022 ஆம் ஆண்டுக்காக பொலிப்ரொப்லீன் பைகள் வழங்கலுக்கான கேள்விமனு" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் 119 நாட்கள் செல்லுபடியுடன் மேலுள்ள அட்டவணைக்கு அமைய "விலைமனு பிணையை" கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (sapumal@lscl.lk).

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் ஒப்பந்த வேலைகளுக்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக்கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
EW/13/EL/2022/ CCTV/II	Installation & Commissioning of CCTV IP Camera for BQ Warehouse	ரூபா 40,000.00	ரூபா 3,000.00	18-07-2022 பி.ப. 2.00 மணி
EW/13/EL/ 2022/170	Service, Rewinding and Repair of the A/C Generator at ECT Transfer Crane No. TT 44	ரூபா 25,000.00	ரூபா 2,000.00	18-07-2022 பி.ப. 2.00 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான சேவைகளை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, மின்சாரப் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளர் (மின்சாரம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022-06-20ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00) மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பிரதான பொறியியலாளர் (மின்சாரம்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (மின்சாரம்),
இயந்திரப் பொறித்தொகுதி பொறியியல் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.
தொலைபேசி எண்கள்: 011-2394502, 011-2483658
தொலைநகல் இல. 011 2326523

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை (SLSEA)

விநியோகத்தர்களை பதிவு செய்தல்

செயற்றிறனான உயிர்த்திரள் அடுப்பு/ உயிர் வாயு சாதனங்கள் விநியோகத்தர்களும் உயிர்த்திரள் துகள்கள் (Pellets)/ தேங்காய் சிரட்டை / விறகு விற்பனையாளர்களும்

1. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையானது (SLSEA) செயற்றிறனான உயிர்த்திரள் அடுப்புகளின் பயன்பாட்டை தீவிரப்படுத்த எதிர்பார்த்துள்ளது, குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்புகளில் விசேட கவனம் செலுத்த எதிர்பார்க்கிறது. தற்போதுள்ள LP வாயு பிரச்சனைக்கு உடனடி தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பதிவு செய்யும் வாய்ப்பானது துகள்கள், தேங்காய் சிரட்டை விறகு அல்லது வேறு புதுப்பிக்கத்தக்க சக்தி முதல்களைப் பயன்படுத்தும் அடுப்புகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும் ஒரு வருட உத்தரவாத காலத்துடன், ஒரு மாதத்திற்கு 500 அடுப்புகளுக்கு மேல் உற்பத்தி செய்பவர்கள்/ விநியோகத்தர்கள் பதிவினை மேற்கொள்ளலாம். இது தவிர உயிர்த்திரள் சாதனங்கள் உற்பத்தி செய்பவர்கள்/ விநியோகத்தர்கள் கருத்தில் கொள்ளப்படும்.
2. திறமையான உயிர்த்திரள் அடுப்புகளின் விநியோகத்துடன், மேலே குறிப்பிட்ட சக்தி முதல்களுக்கான தேவைப்பாடும் ஏற்படும் என்பதால் அடுப்புக்கள் உயிர்வாயு சாதனங்களின் விநியோகித்தர்களை பதிவு செய்வதுடன் சக்தி மூலங்களின் வழங்குநர்களையும் பதிவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.
3. நீங்கள் விநியோகிக்கும் செயற்றிறனுள்ளதும், சுற்றுச்சூழல் நட்பானதும் பயன்படுத்த எளிதானதுமான அடுப்புக்களை தேர்ந்தெடுத்து அவற்றை இந்த செயற்றிட்டத்திற்கு பயன்படுத்துவோம். www.energy.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யக்கூடிய பதிவுப் படிவங்களைப் பூர்த்தி செய்து பதிவு செய்யுமாறு இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை உங்களை அழைக்கிறது.
   a) செயற்றிறனான உயிர்த்திரள் விநியோகத்தர்கள் ---------- இணைப்பு 01
   b) உயிர் வாயு விநியோகத்தர்கள் ---------- இணைப்பு 02
   c) உயிர்த்திரள் துகள்கள் (Pellets), தேங்காய் சிரட்டை, விறகு அல்லது வேறு புதுப்பிக்கத்தக்க சக்தி முதல் விற்பனையாளர்கள் ---------- இணைப்பு 03
4. தேசிய உயிர்த்திரள் அடுப்பு விநியோகிக்கும் செயற்றிட்டத்தில் பங்கேற்க, ஜூலை 04, 2022 அன்று அல்லது அதற்கு முன் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையில் பதிவு செய்ய வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை கொள்கை ஆலோசனை இயக்குநர், திருமதி. தில்ஹானி அவர்களை அலுவலக நேரத்தில் 0112575030 என்ற தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ள முடியும்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை
இல 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்த, கொழும்பு 07.

தொலைபேசி : 94(0)112575030 **மின்னஞ்சல் : info@energy.gov.lk**
தொலைநகல் : 94(0)112575089 **இணையத்தளம் : www.energy.gov.lk**

18 ஜூன் 2022

களனி பிரதேச சபை

வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு பெறல்

களனி பிரதேச சபைக்கு 2022.08.01 முதல் 2022.12.31 வரையான 05 மாத காலத்திற்கு கீழ்க்காணும் வாகனங்கள் மற்றும் இயந்ராதிகளை வாடகைக்குப் பெறுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வாகன வகை	ஒரு மணித்தியாலத்திற்கு அறவிடும் கட்டணம்	ஒரு நாளைக்கு அறவிடும் கட்டணம்	ஒரு மாதத்திற்கு அறவிடும்
டிப்பர் - 3 1/2 கியூப்			
JCB இயந்திரம்			
PC 30 இயந்திரம்			
கலி பவுசர் - 1000 L மற்றும் 2000 L			
கல்ரோல் 4 தொன் மற்றும் 8 தொன்			

அதனடிப்படையில் ரூ. 1,000.00 படிவக் கட்டணம் தொகையை களனி பிரதேச சபையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 2022.07.11ம் திகதி வரை மாத்திரம் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர்த்து)

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் செயலாளர், களனி பிரதேச சபை, புளுகஹ சந்தி, களனி என்ற முகவரிக்கு 2022.07.12 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து நிறுவனத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மு.ப. 10.00 இற்கு கேள்விப் பெட்டி பொறியிடப்படுவதுடன், அன்றைய தினம் மு.ப. 10.05 இற்கு கேள்வி திறக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

டிப்பர் இற்கான நிபந்தனைகள்

01. மாதாந்தம் எரிபொருள்/ சாரதி/ வாகனம் வழங்கப்படல் வேண்டும்.
02. திங்கள் முதல் சனி வரை மு.ப.8.00 முதல் பி.ப. 6.00 வரை சேவையை வழங்குதல் வேண்டும்.
03. ஞாயிறு தினம் மற்றும் போயா தினங்களில் மட்டும் வாகனத்தின் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
04. கனனி மானெல்கம பிரதேசம் முதல் முதுராஜவல வரை அன்றாடம் குறைந்தபட்சம் 03 லோட் குப்பைகள் அகற்றப்படல் வேண்டும்.
05. வேலை நாட்களில் குறித்த சேவையை வழங்குவதற்கு முடியாமல் போனால் அதற்கான நாளாந்த கட்டணம், மாதாந்த தொகையில் கழிக்கப்படுவதற்கு ஏதுவாகும்.
06. மாதாந்தம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
07. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2022.12.31ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

JCB மற்றும் PC 30 இற்கான நிபந்தனைகள்

01. ஒரு மணித்தியாலத்திற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.
02. எரிபொருள்/ சாரதி/ வாகனம் வழங்கப்படல் வேண்டும்.
03. தேவைப்பாட்டின் அடிப்படையில் எந்த நாளிலும் குறித்த சேவையை வழங்குதல் வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகன, இயந்திராதிகளுக்கான விலைமனுக்கள் கோரல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க முடிவதுடன் இவ் விலைமனுக்கள் பற்றிய இறுதித் தீர்மானம் களனி பிரதேச சபை கேள்விக் கமிட்டிக்கு உரியது.

2022.06.20

டபிள்யூ.டி. சாந்தி குமுதுனி
தலைவர்,
களனி பிரதேச சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத்திட்டம் (CRIWMP)

நீர்ப்பாசன அமைச்சு

(தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)

IFB No.: CRIWMP/NCB/VIS/2022/(13 Packages)

திகதி: 2022.06.20

பின்வருவனவற்றிற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்: கீழே பட்டியலிடப்பட்டவாறு அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் கிராம நீர்ப்பாசன முறைமைகளின் புனர்நிர்மாணம்.

1. காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட ஆகுசெலவிற்கான பசுமை காலநிலை நிதியத்திலிருந்து UNDP இன் தரஅங்கீகார முகவரான்மையுடன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது நிதியிடலைப் பெற்றுள்ளது. இந்த நிதியத்தின் பாகமொன்றானது கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக பாவிக்கப்படும். கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஒப்பந்த பொதிகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை செயற்றிட்ட பெறுகைக் குழுவின் சார்பாக காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளர் அழைக்கின்றார்.

தொடர் இல.	பொதியின் விளக்கம்	IFB No./Pack No.	விலைமனுப் பிணை உத்தரவாதம் (ரூபாவில்)	CIDA தரம்
அநுராதபுர மாவட்டம், மதவாச்சி பி.செ. பிரிவு, அலுத்-ஹல்மில்லாவ ஆற்றுப்படுக்கை (01 பொதி)				
01.	பலுகொல்லாவ குளம், புஹுல்திவுல குளம் கிராம குளங்களின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCB/ALUTH/2022/-04	300,000	சி-5 மற்றும் சி-6
அநுராதபுர மாவட்டம், மதவாச்சி பி.செ. பிரிவு, வீஹேன-கரம்பா குளம் ஆற்றுப்படுக்கை (02 பொதிகள்)				
02.	பாலுக்கோள குளம் மற்றும் திவுல்கஹா குளம் கிராம நீர்ப்பாசன திட்டங்களை புனர்நிர்மாணித்தல்	CRIWMP/NCB/VEEHENA/2022/18	200,000	சி-5 மற்றும் சி-6
03.	கரம்பா குளம் கிராம நீர்ப்பாசன முறைமையை புனர்நிர்மாணித்தல்	CRIWMP/NCB/VEEHEN/2022/19	150,000	சி-5 மற்றும் சி-6
அநுராதபுர மாவட்டம், மதவாச்சி பி.செ. பிரிவு திவுல் குளம் ஆற்றுப்படுக்கை (05 பொதிகள்)				
04.	யோதகுளம் கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCP/DIVUL/2022/21	200,000	சி-5 மற்றும் சி-6
05.	கல் குளம் கிராமிய நீர்ப்பாசன முறையின் புனர்நிர்மாணம்.	CRIWMP/NCB/DIVUL/2022/22	200,000	சி-5 மற்றும் சி-6
06.	யோத எல அணைக்கட்டு மற்றும் மகிச்சியாவ குளம் கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCB/DIVUL/2022/23	350,000	சி-5 மற்றும் சி-6
07.	தில்லங்கள குளம் கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனர்நிர்மாணம்.	CRIWMP/NCB/DIVUL/2022/24	350,000	சி-5 மற்றும் சி-6
08.	மினிஹிட்டிகம குளம் கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCB/DIVUL/2022/26	350,000	சி-5 மற்றும் சி-6
குருநாகல் மாவட்டம், கல்கமுவ பி.செ. பிரிவு, மொட்டபெத்தாவ குளம் ஆற்றுப்படுக்கை (04 பொதிகள்)				
09.	மொட்டபெத்தாவ குளம், என்டருகொட்டுவ அமுண, பணாகொட்டுவ அமுண கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCB/MOTTA/2022/27	400,000	சி-5 மற்றும் சி-4
10.	பஹல பலுகண்டாவ குளம், இஹல பலுகண்டேவ குளம் கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCB/MOTTA/2022/28	350,000	சி-5 மற்றும் சி-6
11.	இஹல குளம், விமலதாசே குளம், இஹல கோணாரகம குளம் கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புனர்நிர்மாணம்	CRIWMP/NCB/MOTTA/2022/30	250,000	சி-5 மற்றும் சி-6
12.	ரம்பொட்டுக்குளம குளம், வெலிஹிட்டாவ குளம் கிராமிய குளங்கள்	CRIWMP/NCB/MOTTA/2022/35	350,000	சி-5 மற்றும் சி6
அநுராதபுர மாவட்டம், மதவாச்சி பி.செ. பிரிவு, திவுல் குளம் ஆற்றுப்படுக்கை (01 பொதி)				
13.	புலு குளம், ஹெலம்பா குளம் கிராமிய நீர்ப்பாசன முறைமைகள்	CRIWMP/NCB/DIVUL/2022/31	300,000	சி-5 மற்றும் சி-6

2. குளக்கட்டு அமைத்தல், நீர் கசிவு மற்றும் மடைகதவு கட்டமைப்புக்கள் (பிரதான வேலைகள்) மற்றும் அணைக்கட்டுகள் 90 நாட்களுள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு பொதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து கிராமிய நீர்ப்பாசன குளங்கள்/ முறைமைகளின் நிர்மாணங்கள் ஒரே நேரத்தில் ஆரம்பித்தல் வேண்டும்.
3. விலைமனுக்கள் ஆரம்பத்தில் ஒப்பந்த பொதி-வாரியாக மதிப்பீடு செய்யப்படும். விலைமனுதாரர்கள் எந்தவொன்றிற்கு அல்லது அதிகமான ஒப்பந்த பொதிகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தெரிவைக் கொண்டுள்ளார்கள். ஒரு பொதிக்கு மேலாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் மேலே சுட்டிக்காட்டியவாறு ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியான விலைமனுப்பிணையை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு ஒப்பந்த பொதிக்குமான இயந்திராதி, உபகரணங்கள், வளஒதுக்கீடு ஆகியவற்றை குறிப்பிடும் தகைமை, தகுதித்தன்மை தகவுத்திறனை பிரத்தியேகமாக அடக்குதல் வேண்டும். இறுதி மதிப்பீட்டு செயற்பாட்டின் வேளையில் செயற்றிட்டத்தின் மிக அதிக பொருளாதார இணைப்பு தொடர்பாக தீர்மானமெடுப்பதற்காக ஒட்டுமொத்தமான அனைத்து போதுமானளவு பதிலிறுக்கக்கூடிய விலைமனு பொதிகள் பரிசீலனை செய்யப்படும். விலைமனுதாரரொருவர் ஒரு பொதிக்கு மேலாக வெற்றிகரமான விலைமனுதாரரென பரிந்துரைக்கப்படின், அவரது முன்னுரிமை வரிசையானது மேலேயுள்ள மிக அதிக பொருளாதார இணைப்பில் அடக்கப்படக்கூடிய சாத்தியமிருப்பின், உரிய பரிசீலனை வழங்கப்படலாம். அவ்வாறான வெற்றிகரமான விலைமனுதாரர்களிடமிருந்து ஏனைய பொதிகளுக்கான விலைமனுக்கள் ஒட்டுமொத்தமான கொள்ளளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் தகைமை/ தகுதித்தன்மை தகவுத்திறன்/ வளஒதுக்கீடு மற்றும் ஒப்பந்தம் ஆகியன ஆகக்கூடியது இரு ஒப்பந்த பொதிகளுக்கு மட்டுப்படுத்தப்படும்.
4. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக, விரும்பின், இலவசமாக பரீட்சித்து மேலதிக தகவலை நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP, செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் - தொடர்பு எண் - 0112672228 மற்றும் மின்னஞ்சல்: tendercriwmp@gmail.com
6. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரமான தகைமைத் தேவைப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள அதே வேளையில், சில முக்கியமான தகைமைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.
   அ) விலைமனுதாரர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய்கள் துறையில் மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறான CIDA (ICTAD) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ) நிர்மாண அனுபவம்: கடந்த பத்து வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை வெற்றிகரமான பூர்த்தி செய்த திட்டவட்டமான அனுபவம்.
7. 2022.06.20 ஆம் திகதியிலிருந்து 2022.07.11 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத் தொகுதிக்கும் (பொதி) மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், CRIWMP செயற்றிட்டப் பணிப்பாளருக்கு ஒப்பந்தக்காரரின் வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-10, **T.B.** ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்திலுள்ள 12 ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் **CRIWMP** அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
8. விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்கள் காலப்பகுதிக்கு (விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான தொகைக்கு செயற்றிட்டப் பணிப்பாளர், **CRIWMP,** நீர்ப்பாசன அமைச்சு என்ற பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுதாரரானவர் இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் விலைமனுவின் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' ஆகியவற்றை உள்ளடக்கிய பின்னர் அவைகளை முத்திரையிட்டு அவைகளின் மேற்பகுதியில் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என குறிப்பிட்டு, அதன் பின்னர் அவையிரண்டையும் இன்னொரு தனியான தபாலுறையில் சேர்த்து அதனை முத்திரையிட்டு அத்தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பொதி இலக்கம் மற்றும் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். ஒரு ஒப்பந்த பொதிக்கு மேலதிகமாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுதாரரானவர் அவ்வாறான ஒவ்வொரு பொதிக்கும் அதே முறைமையில் இரு தபாலுறைகளை தயாரித்து, முத்திரையிட்டு அவையிரண்டையும் தனியொரு தபாலுறையில் சேர்த்து முத்திரையிட்டு, அவ்வாறான தனியொரு தபாலுறைகள் அனைத்தையும் ''**MASTER ENVELOPE"** ஒன்றில் உள்ளடக்கம் செய்யப்படல் வேண்டும். ஒப்பந்தக்காரரினால் உரிய முறையில் கையொப்பமிட்ட ''சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து பொதிகளுக்குமான முன்னுரிமை பட்டியல் முறைமையானதும்'' ''**MASTER ENVELOPE**" இல் அடக்கப்படல் வேண்டும்.
10. 2022.07.05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஏழாம் (7) பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு முன்னராக விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே விலைமனுவைத் தயாரிப்பதற்காக வேலைத்தளங்களை பரீட்சித்து தகவலைப் பெற்றுக் கொள்ளுமாறு வளமுள்ள விலைமனுதாரர்கள் ஊக்கப்படுத்துகின்றனர்.
11. தற்போது சந்தையிலுள்ள ஏற்ற இறக்கங்களை பரிசீலனை செய்யும் போது, CIDA பிரசுரத்திலுள்ளவாறு சிறிய நீர்ப்பாசனங்களுக்காக ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் மற்றும் குறியீட்டு சூத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் 47 ஆம் உட்கூற்றிக்கு அமைவாக விலை சீரமைத்தலுக்காக ஒப்பந்தங்கள் உட்பட்டதாக அமையும். வெற்றிகரமான ஒப்பந்தங்காரர்கள், பசுமை காலநிலை நிதிய மானியத்தினால் CRIWMP நிதியிடப்பட்டுள்ளதினாலும் வளங்களை திரட்டுவதற்காக, 30% முற்பணத்தை பெற்றுக் கொள்ள இயலுமென்பதுடன் உரிய பணக்கொடுப்பனவுகளை ஒப்பந்தங்காரர்களுக்கு செலுத்துவதில் தாமதங்கள் இருக்கமாட்டாது.
   எவ்வாறாயினும், கூட்டுறவு காப்புறுதி கம்பனிகளிலிருந்து வழங்கப்பட்ட விலைமனு/ முற்பண காப்புறுதி உத்தரவாதங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
12. 2022.07.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் சேர்க்கப்படலாம் அல்லது செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படுவதுடன் பெற்றுக் கொண்ட விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் ஒப்பந்தங்காரர்களின் முன்னிலையில் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் (7) ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் திறக்கப்படும்.
13. தள விஜயங்கள் தொடர்பான ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்கள் அடங்கலாக விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு தொழில்வழங்குநர் பொறுப்பேற்கமாட்டார்.

தலைவரின் சார்பாக,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
செயற்றிட்ட பணிப்பாளர்,
காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,
நீர்ப்பாசன அமைச்சு,
12 ஆம் மாடி, 500, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு-10.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்

இளம் ஒட்டு (பொலிபேக்) இறப்பர் கன்று நாற்றுமேடைகளை அமைப்பதற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் 2022 ஆகஸ்ட் / செப்டெம்பர்

தனியார் இறப்பர் கன்று நாற்றுமேடை உரிமையாளர்களிடமிருந்து 2022 ஆகஸ்ட்/ செப்டெம்பர் காலப்பகுதிக்கு வர்த்தக மட்டத்தில் பெருந்தோட்டப் பொருள் உற்பத்திக்குத் தேவையான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

PB 86, RRIC 100, R. R. I. C. 102, R.R.I.S.L 203 மற்றும் R.R.I.S.L 2001 clones என்பவற்றின் இளம் ஒட்டு பொலிபேக் கன்றுகளை உற்பத்தி செய்ய முடியும் என்பதுடன் இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் பிரகாரம் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் கன்றுகளை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படும். (கவனிக்கவும்: 05 ஹெக்டயாருக்கு மேற்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மட்டும் R.R.I.S.L, 203 clone வழங்குதல் வேண்டும்)

நாற்றுமேடையை அமைப்பதற்கு உத்தேசிக்கும் காணியின் தகுதி பரீட்சித்துப் பார்த்ததன் பின் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என்பதுடன் நாற்றுமேடைக்கு ஒட்டுக் கிளைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2022ஆம் வருடமாகும்போது, 10 வருடத்திற்கு மேற்படாத வயதைக் கொண்ட ஒட்டுக் கிளைகள் நாற்றுமேடை உரிமையாளர்கள் வசம் இருத்தல் கட்டாயமாகும்.

இறப்பர் மீள்நடுகை/புதிய பயிர்ச்செய்கை நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்திற்குரித்தான அல்லது திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட விற்பனை நாற்றுமேடைகளில் இறப்பர் கன்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதால் சகல அரச பெருந்தோட்ட நிறுவனங்கள், தனியார் பெருந்தோட்ட நிறுவனங்களுக்குரித்தான இறப்பர் கன்று நாற்றுமேடைகள் மற்றும் தனியார் இறப்பர் நாற்றுமேடைகளை ஆரம்பிப்பவர்கள் இந்தத் திணைக்களத்திலிருந்து அதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் நாற்றுமேடைகள், 2022 ஆகஸ்ட் 31ஆம் திகதியாகும்போது நாற்றுமேடை வேலைகளை ஆரம்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களை இயைபுடைய மாவட்டப் பணிப்பாளர் (பிராந்தியம்) மற்றும் தலைமை அலுவலகத்தில் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளாம் என்பதுடன் இயைபுடைய முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன பின்வருமாறாகும்.

1. களுத்துறை மாவட்டம்
   பணிப்பாளர் (பிராந்தியம்),
   இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,
   பிராந்திய அலுவலகம்,
   2/195, பிரதான வீதி,
   களுத்துறை.
   தொ.பே. 034-2228934
2. கேகாலை, கண்டி, மாத்தளை, குருநாகல், கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்கள்
   பணிப்பாளர் (பிராந்தியம்),
   இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,
   பிராந்திய அலுவலகம்,
   1/16, சேர் பிரான்சிஸ் மெலமுரே மாவத்தை,
   கேகாலை.
   தொ.பே. 035-2222326
3. இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்கள்
   பணிப்பாளர் (பிராந்தியம்),
   இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,
   பிராந்திய அலுவலகம்,
   த.பெ. இல. 02, புதிய நகரம்,
   இரத்தினபுரி.
   தொ.பே. 045-2222113
4. காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்
   பணிப்பாளர் (பிராந்தியம்),
   இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,
   பிராந்திய அலுவலகம்,
   மேல் டிக்சன் வீதி, காலி.
   தொ.பே. 091-2242490
5. மொனராகலை, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்கள்
   பணிப்பாளர் (பிராந்தியம்),
   இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,
   பிராந்திய அலுவலகம்,
   பழைய கச்சேரி கட்டிடம்,
   மொனராகலை.
   தொ.பே. 055-2276207
6. வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள்
   பணிப்பாளர் (பிராந்தியம்),
   இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்,
   பிராந்திய அலுவலகம்,
   1/16, சேர் பிரான்சிஸ் மெலமுரே மாவத்தை,
   கேகாலை.

விண்ணப்பப் படிவங்களை நாற்றுமேடை அமைந்திருக்கும் மாவட்டத்திற்கு இயைபான பிராந்திய அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2022 ஜூலை மாதம் 10ஆம் திகதியாகும் என்பதுடன், அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட மாட்டாது.

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
இல. 465, கனஹேன,
கடுவளை வீதி,
பத்தரமுல்ல.
தொ.பே. 0112-889447 / 0112-889446

மாதவ வர்ணகுலசூரிய,
பணிப்பாளர் நாயகம்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

பிரதேச சபை சம்மாந்துறை

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத்திட்டத்தின் கீழான செயற்றிறன் ஒதுக்கீடு

Construction of new Metal roof over Alayadi Market shop at Sammanthurai-05

Contract Number: LDSP/EP/AM/STR/PS/PT-01/2022/01

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு சம்மாந்துறை -05 இல் ஆலையடி சந்தை கடையின் மேல் புதிய உலோக கூரை நிர்மாணம் ஒப்பந்தத்தில் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியினை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சம்மாந்துறை பிரதேசசபையின் சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடைபெறும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் சம்மாந்துறை பிரதேச சபை பெறுகைக்குழு தலைவரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் (தொ.இல/தொ.நகல் 0672260043/ 0672260235) (மின்னஞ்சல் - strps2009@yahoo.com) என்பதோடு 2022 ஜூன் 20 ஆம் திகதி தொடக்கம் 2022 ஜூலை 11 வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. தகைமைத் தேவைகள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளது.
6. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் தடுப்புப்பட்டியலில் இடம் பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக கட்டட கட்டுமானத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவினை செலுத்தி 20 ஜூன் 2022 முதல் 2022 ஜூலை 11 வரை வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை சம்மாந்துறை பிரதேச சபையின் தலைவருக்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 11 ஜூலை 2022 அன்று 15.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு அசல் மற்றும் நகல் பிரதிகளில் தயாரித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றபின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்
9. விலைமனுவிற்கு முந்தைய கூட்டம் 30 ஜூன் 2022 அன்று 11.00 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையில் நடைபெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் விலைமனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
10. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது
11. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை இரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது

Contract No	Description of Works	Tenderable Amount (Mn)	Contract Period	Required Grade	Bid Validity Period	Required Bid Security		Validity Period up to
						Bid Security Amount	Validity Period	
LDSP/EP/AM/ STR/PS/PT-01/2022/01	Construction of new Metal roof over Alayadi Market shop at Sammanthurai-05	4.235Mn	90 calendar days	C8 & C7 Building Construction	63 days	64000.00	10.10.2022	12.09.2022

தலைவர்,
பெறுகைக்குழு,
பிரதேசசபை,
சம்மாந்துறை.

அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய இராச்சியம் டபிள்யு வீ 24 7 ஏச் ஈ மொட்வெட் மேற்கு பீல்ட் அவென்யு 76 ஆம் இலக்கத்தில் வசிக்கும் குணசேகர முதியன்செலாகே சந்தன குணசேகர (தே. அ.அ. இல. 519674669V) என்பவரினால் மாலபே, லேக் பாதை, செல்னா ரெஸிடென்சீஸ், இல. 289/5/A/34 என்ற முகவரியில் வசிக்கும் அமா குமாரி குணசேகர (தே.அ.அ. இல. 197053810042) என்பவரை 2020.11.18 ஆம் திகதியன்று எனது அற்றோணித்தத்துவக்காரராக நியமித்த வெளிநாட்டு அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அனைவருக்கும் அறிவிக்கின்றேன்.

எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்டுள்ள அற்றோணித் தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

குணசேகர முதியன்செலாகே சந்தன குணசேகர

அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய அமெரிக்கா அயோவா 52241 கொரல்வில் 14 ஆம் வீதி 2102 ஆம் இலக்கத்தில் வசிக்கும் டவுண்ட முதியான்செலாகே உபேந்திரா சுமணசிரி (தே.அ.அ. இல. 731522618 V) என்பவரினால் ஹோமாகம, ஹபரகட, கூட்டுறவு மாவத்தை 371/9 என்ற முகவரியில் வசிக்கும் மத்தகே தொன் நிமல் கப்புமுல்ல (தே.அ.அ. இல. 711880992 V) என்பவரை 2020.08.20 ஆம் திகதியன்று எனது அற்றோணித்தத்துவக்காரராக நியமித்த வெளிநாட்டு அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அனைவருக்கும் அறிவிக்கின்றேன்.

எதிர்காலத்தில் மேற்குறிப்பிட்டுள்ள அற்றோணித்தத்துவத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

டவுண்ட முதியான்செலாகே உபேந்திரா சுமணசிரி

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விண்ணப்பத்திற்கான அறிவித்தல்

வழக்கு இல: DTS/23/2022
தன்மை: மரணசாதனம்
மதிப்பு: ரூ. 37

ஐக்கிய இராச்சியம் 9 Deerhurst Park, Forest Row, East Sussex RH18 5GD என்னும் விலாசத்தில் வசித்துவந்த மரணித்த பிற்றர் ஜோன் எஸ்ரக் அவர்களின் இறுதி விருப்பாவணமும் மரணசாதனமும் மற்றும் மரணச்சொத்து சம்பந்தமான விடயத்தில்

மரணித்தவர்

மற்றும்

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டகோவை அத்தியாயம் XXXVIII B பிரிவு 554 U இன் கீழ் வெளிநாட்டு மரண சாதன அதிகாரப் பத்திரத்தை மீள முத்திரை இடுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயத்தில்

மரணித்த பிற்றர் ஜோன் ஸ்ரக் அவர்களின் இறுதி விருப்பாவணம் மற்றும் மரணசாதனத்தின் மரணசாதன தத்துவக்காரர்களான ஐக்கிய ராச்சியம் GREENWOODS GRM 1 Bedford Row, London WCIR 4BZ வசிப்பவரும் மற்றும் முன்பு 2 More London Riverside London SE1 2 AP என்னும் இடத்தில் வசித்தவருமான காரத் டேவிட் ஹியு மற்றும் தற்போது 256 Campdale Road, Tufnell Park, London N7 0EB 20 வசிக்கும் முன்பு Flat 2 125 Lady Margaret Road London N 195ER இல் வசித்த டேனியெல் விக்டோரியா ஸ்ரக் மற்றும் முன்பு ஐக்கிய இராச்சியம் 9 Deerhurst Park, Forest Row, East Sussex RH 18 5GD வசித்தவரும் தற்போது 59 Hill Brow, Hove East Sussex BN3 6DD வசிப்பவருமான ஷரன் றுத் பில்ஸ்பை வின்ட் முன்பு ஷரன் றுத் பில்ஸ் ஸ்ரக் என அழைக்கப்பட்டவரும் ஆகியோரின் பதிலாள்களான மாகொல மாகொல வடக்கு 12 A இலக்கத்தைச் சேர்ந்த டொன் றுஷான் சஞ்சய லிஹினிகடு மற்றும் கொட்டுகொட நெதகமுவ பட்டஹிற 305/G இலக்கத்தைச் சேர்ந்த ஸபானி ஸெஹானா மொஹம்மட்

மனுதாரர்கள்

2022 சனவரி 19ம் திகதியன்று

மரணித்த பிற்றர் ஜோன் ஸ்ரக் அவர்களின் இறுதி விருப்பாவணம் மற்றும் மரணசாதனம் சம்பந்தமாக 2017 மே மாதம் 4ம் திகதி ஐக்கிய ராச்சியம் GREENWOODS GRM 1 Bedford Row, London WC1R 4BZ வசிக்கும் மற்றும் முன்பு 2 More London Riverside London SE1 2 AP என்னும் இடத்தில் வசித்த காரத் டேவிட் ஹியு மற்றும் தற்போது 25b Campdale Road, Tufncil Park, London N7 0EB இல் வசிக்கும் முன்பு Flat 2 125 Lady Margaret Road London N 19 5ER இல் வசித்த டேனியெல் விக்டோரியா ஸ்ரக் மற்றும் முன்பு ஐக்கிய இராச்சியம் 9 Deerhurst Park, Forest Row, East Sussex RH 18 5GD வசித்தவரும் தற்போது 59 Hill Brow, Hove East Sussex BN3 6DD வசிப்பவருமான ஷரன் றுத் பில்ஸ்பை வின்ட் முன்பு ஷரன் றுத் பில்ஸ்- எஸ்ரக் என அழைக்கப்பட்டவர் ஆகியோர் சார்பாக பிரைட்டன் மாவட்ட மரண சாதன அதிகாரப்பத்திர மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட மரணச் சொத்து நிருவாகப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்திய பிரதிக்கு குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை அத்தியாயம் XXXVIII B பிரிவு 554 U இன் கீழ் மீள முத்திரை பதிப்பதற்கு இங்கு பிரசுரம் செய்யப்பட்ட திகதியிலிருந்து இருபத்தெட்டு நாட்கள் முடிவடைந்ததன் பின் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

ஜோண் வில்சன் பங்காளிகள்
மனுதாரர்களின் சட்டத்தரணி
இல. 365, டாம் வீதி, கொழும்பு - 12

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

ஏல விற்பனை அறிவித்தல்
இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

கடன் தொடர்பு இலக்கங்கள் : 82196394, 70768201, 76987064, 83004142

இல.48, கெப்பிட்டிபொல, ஹப்புத்தலை வீதி, என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ரத்நாயக்க முதியான்சேலாகே அத்துல பண்டார ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் 2019.06.14ஆம் திகதிய 2128ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.06.03ஆம் திகதி வியாழக்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2022.07.19ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கும் 11.30 மணிக்கும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை
ஆதனத்தின் விபரம்

"புலவத்த" என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணியின் குறித்த பிரிக்கப்பட்ட காணித்துண்டு ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் பளுகம கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.50ல் உடுகிந்த உடபலாத்த கோரளையில் பளுகம கிராமத்தில் அமைந்துள்ளதோடு உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.B.இலங்கசிங்ஹ தயாரித்த 20.04.2007 திகதியிட்ட வரைபட இல. BD/6243இல் துண்டு 01 என விபரிக்கப்பட்டுள்ளது. இக்காணித்துண்டு மேற்குறிப்பிடப்பட்ட வரைபடத்தின்படி வடக்கில் கந்தே எல, பிரதான பாதை என்பவற்றையும், கிழக்கில் எஸ்.பீ.ரத்நாயக்க தயாரித்த 17.07.1990 திகதியிட்ட வரைபட இல.106இல் விபரிக்கப்பட்டுள்ள துண்டு இல.03 மற்றும் கே.எம்.எம். ஜயசேகர உரிமைகோரும் காணி என்பவற்றையும், தெற்கில் கே.என்.எம்.சந்ரசேன உரிமைகோரும் காணியையும், மேற்கில் எஸ்.பி.ரத்நாயக்க தயாரித்த 17.07.1990 திகதியிட்ட வரைபட இல. 106இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இல.01 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு ஒரு றூட் ஆறு தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0.றூ1.பே.6.6) ஐயும் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் சகலதையும் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட துண்டு 01 பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும்.

"புலவத்த" என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணியின் குறித்த பிரிக்கப்பட்ட காணித்துண்டானது ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் பளுகம கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.50ல் உடுகிந்த உடபலாத்த கோரளையில் பளுகம கிராமத்தில் அமைந்துள்ளதோடு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.பி.ரத்நாயக்க தயாரித்த 17.07.1990 திகதியிட்ட வரைபட இல. 106இல் துண்டு 02 என விபரிக்கப்பட்டுள்ளது. இக்காணியானது மேற்குறிப்பிட்ட வரைபடத்தின்படி **வடக்கில்** கந்தே எல, பிரதான பாதை என்பவற்றையும், **கிழக்கில்** துண்டு இல. 03 மற்றும் கே.எம்.எம். ஜயசேகர உரிமை கோரும் காணி என்பவற்றையும், **தெற்கில்** கே.என்.எம்.சந்ரசேன உரிமைகோரும் காணியையும், **மேற்கில்** துண்டு இல.01 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளதோடு ஒரு றூட் அறு தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0.றூ1.பே.06.6) பரப்பளவையும் அதன்கண் அமைந்துள்ள சகலதையும் கொண்டுள்ளது. இது பதுளை மாவட்ட காணிப்பதிவகத்தில் N45/80 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"பதினாவெல அஸ்வெத்தும" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச்.எம்.சமரநாயக்க தயாரித்த 16.06.1999 திகதியிட்ட வரைபட இல. 2184இல் துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் உடுகிந்த உடபலாத்த கோரளையில் வெலிமட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேசசபை எல்லைகளுள் பதினவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹரக்கமகந்த கிராமத்தில் அமைந்துள்ளதோடு **வடக்கில்** துண்டு இல.02 ஐயும், **கிழக்கில்** துண்டு இல.02, பெருந்தெருக்கள் பாதை (நுவரெலிய - வெலிமட பிரதான பாதை) என்பவற்றையும், **தெற்கில்** பெருந்தெருக்கள் பாதை (நுவரெலியா - வெலிமட பிரதான பாதை) மற்றும் குசுமாவதி உரிமைகோரும் காணி என்பவற்றையும், **மேற்கில்** எலயையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வரைபட இல.2184இன் படி முப்பத்தாறு தசம் மூன்று பேர்ச்சுகள் (ஏ00.றூ00.பே.36.3) பரப்பளவுடைய இக்காணி அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் கொண்டுள்ளதோடு பதுளை காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் N16/69ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"பதினாவெல அஸ்வெத்தும" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச்.எம்.சமரநாயக்க தயாரித்த 16.06.1999 திகதியிட்ட வரைபட இல.2184இல் துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் உடுகிந்த உடபலாத்த கோரளையில் வெலிமட பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேசசபை எல்லைகளுள் படினவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹரக்கமகந்த கிராமத்தில் அமைந்துள்ளதோடு **வடக்கில்** எலயையும், **கிழக்கில்** திசாலஹாமிக்குச் சொந்தமான காணியைப் பிரிக்கும் நடைபாதையையும், **தெற்கில்** பெருந்தெருக்கள் பாதை (நுவரெலியா - வெலிமட பிரதான பாதை) மற்றும் துண்டு இல. 01 என்பவற்றையும், **மேற்கில்** துண்டு இல 1. மற்றும் எல என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2184இன் படி இரண்டு றூட்கள் (ஏ00.றூ02.பே.00) பரப்பளவைக் கொண்டுள்ள காணி அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் கொண்டுள்ளதோடு பதுளை காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் N16/119இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.எச்.எம்.சமரநாயக்க தயாரித்த 16.06.1999 திகதியிட்ட மேற்குறிப்பிட்ட வரைபட இல.2184இல் விபரிக்கப்பட்டுள்ள பாதை முழுவதும் நெடுகவும் வழி உரிமையையும் கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

திரு. டப்ளியு.எஸ். ஜீவானந்த
முகாமையாளர்

இலங்கை வங்கி
வெலிமட கிளை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)

டாட்டா புதிய சிலின்டர் புளொக்குள் மற்றும் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு

(SLTB/TS/GEN/02-I/2022)

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் 2022.07.11 மு.ப. 10.30 வரை தரப்பட்டுள்ள மாதிரிகளுக்கு அமைவாக 60 நாள், கடன் அடிப்படையில் அசோக்லேலண்ட் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகிப்பதற்காக தகைமையான வழங்குநர்களிடமிருந்து, பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்து சபையின் சார்பாக இ.போ.ச பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு - 05, கிருல வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவு, செயலாளர் இடம் காணப்படும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அலுவலக நேரங்களில் வேலை நாட்களில் ஓர் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூ. 12,500/- செலுத்துவதன் பேரில் 2022.06.20 முதல் 2022.07.08 வரை விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

விபரம்	விலைமனுப் பிணை (ரூபா)
60 நாள் கடன் அடிப்படையில் டாட்டா புதிய சிலின்டர் புளொக்குகள் மற்றும் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகித்தல்	500,000/-

2. பஸ்களின் உதிரிப்பாக மொத்த பெயர் குறிப்பிடப்படும் உள்ளூர் பிரதிநிதிகள்/ உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் மாத்திரம் விலைமனுக்கோர தகைமை பெறுவர்.
3. உற்பத்தியாளர்களின் அதிகாரமில்லாத விலைமனுக்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
4. (அ) விலைமனு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் 1987ஆம் ஆண்டின் ஒப்பந்த இல 3 இன் விதிகளின் கீழ் கொழும்பு - 10, D.R. விஜேவர்தன மாவத்த, 'சமாகம் மெதுர' பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் கீழ் ஓர் விலைமனுதாரரின் சார்பாக அல்லது முகவராக செயற்படும் எந்த நபர், உதவி முகவர், பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர் சான்றிதழின் மூலம் பிரதியை சமர்ப்பிக்கத் தவறும் விலைமனுதாரரின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   (ஆ) 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் இல-03 விதிகளின் கீழ் பெறுகை வழங்கப்படுவதற்கு முன் மற்றும் விலைமனு சமர்ப்பித்த பின்னர் உடனடியாக தாமாகவே விலைமனுதாரர்களும் பதிவு செய்யப்படுவர். சம்பந்தப்பட்ட பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத எந்த விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்பட மாட்டாது.
5. விலைமனுக்கள் 2022.10.12ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் எனினும் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிட்ட தினத்திலிருந்து ஆறு (06) மாத காலத்திற்கு விலைமனுக்கள் உறுதிப்படுத்தப்படும்.
6. இபோச வினால் முதல் எழுத்துமூல வேண்டுதலின் பேரில், மாற்றமுடியாத மற்றும் நிபந்தனையற்ற கோரப்படும் போது வழங்கக்கூடிய மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்படும் மேலே குறிப்பிடும் பெறுமதிக்கு 2022.11.11 வரை செல்லுபடியாகும் ஒரு விலைமனுப்பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். மேலே குறிப்பிடுமாறு ஓர் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்படாத எந்த விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
7. விலைமனு ஆவணத்தின் எல்லாப் பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது முத்திரை இடப்படல் வேண்டும்.
8. 2022.07.11 மு.ப. 10.30 அல்லது அதற்கு முன் கொழும்பு-05 கிருல வீதி 200, இலங்கை போக்குவரத்து சபை பெறுகை பிரிவில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும். அல்லது நகல்களுடன் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அசோக்லேலண்ட் அசோக்லேலண்ட் மற்றும் டாட்டா புதிய சிலின்டர் புளொக்குகள் மற்றும் புதிய சிலின்டர் ஹெட்களை வழங்கி விநியோகித்தலுக்கான விலைமனு' என்று குறிப்பிடப்பட்டு, பொறியிடப்பட்ட உறைகளில் இடப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் கொழும்பு-05, கிருல வீதி, 200, இலங்கைப் போக்குவரத்து சபை, பெறுகைப் பிரிவில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
இபோச பெறுகைக்குழு,
இலங்கை போக்குவரத்துச் சபை,
இல-200, கிருல வீதி, கொழும்பு-05

விசாரணைகள், செயலாளர், பெறுகைக் குழு - இலங்கை போக்குவரத்து சபை
தொ.பே - 011-7706110, 077-1056110 தொ.பே/ பெக்ஸ் :- 011-2588457

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

ஊவா மாகாண கல்வி அமைச்சு

ஊவா மாகாண சபை

பொதுக் கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டம் (GEMP)

பொதி இல:- GEM/UP/G/2022

1) பின்வருமாறு விபரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பில் பதுளை, ஊவா மாகாண சபை, ஊவா மாகாண கல்வி அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

உருப்படி இல.	விபரம்	எண்ணிக்கை (அலகுகள்)	கேள்விப் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா)	வழங்கல் விபரங்கள்
1	UPS	63	10,000.00	தேவைப்படும் எண்ணிக்கையை வழங்குவதற்கு விலைமனுதாரருக்கு முடிமாயிருத்தல் வேண்டும். நாட்டில் நிலவும் சந்தை நிலைமையை கருத்திற்கொண்டு முழு எண்ணிக்கையை வழங்க முடியாத நிலைமை இருப்பின் தேவைப்படும் எண்ணிக்கையின் குறைந்த பட்சம் 1/3 ஐ உங்களுக்கு வழங்க முடியுமாயின் உங்களுக்கு விலை மனுக்களை சமர்ப்பிக்க முடியும் என இத்தால் உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.
2	Laptop Computer (i5)	24	50,000.00	
3	Multimedia Projector	30	50,000.00	
4	Multimedia Projector Screen	29	10,000.00	
5	Smart Interactive Panel (Including all Accessories) with UPS	20	100,000.00	

02. கேள்விகள், தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறைமைக்கமைய இடம்பெறும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்க ஆர்வம் கொள்ளும் கேள்விதாரர்கள் பதுளை, ஊவா மாகாண சபை, ஊவா மாகாண கல்வி அமைச்சு, பிரதான கணக்காளரிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே. இல. 055-2222814, தொலைநகல்: 055-2230962) மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலேயே 2022 ஜூன் 20ஆம் திகதி முதல் 2022 ஜூலை மாதம் 10ஆம் திகதி வரையான கடமை நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். 2022.06.17ம் திகதிய இல. 16/ 2022 பொது நிர்வாக சுற்று நிருபத்தின் மூலம் வேலைக்காக ஊழியர் குழாமை அழைப்பது மட்டுப்படுத்தப்படுவதால் விலைமனுக்களை சேகரிப்பதற்கு வருகை தருவதற்கு முன்பு தயது செய்து தொ.பே. இல. :- 071-8243839 ஊடாக திரு. டில்சானை அழையுங்கள்.
04. 2022 ஜூன் மாதம் 20ஆம் திகதி முதல் 2022 ஜூலை மாதம் 10ஆம் திகதி வரையான கடமை நாட்களில் மேற்படி (03ஆம் பந்தியில்) முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரிலும் மற்றும் ஊவா மாகாண கல்வி அமைச்சின் பிரதான கணக்காளருக்கு மீளளிக்கப்படாத மூவாயிரத்து ஐநூறு ரூபா (3,500.00 இல. ரூபா) கட்டணத்தை மேற்குறிப்பிடப்பட்ட பொதிக்காக செலுத்துவதன் பேரிலும் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
   2022 ஜூன் 30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு 3ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள ஊவா மாகாண கல்வி அமைச்சின் கூட்ட அறையில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
05. இரு நகல்களிலான கேள்விகளை 2022 ஜூலை 11ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் மேற்படி (01ஆம் பந்தி) முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். நகல் பிரதிகள் சகல மூலப் பிரதியின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளாகவிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2022 ஜூலை 11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவுற்ற உடனடுத்து பின்வரும் முகவரியில் சுய விருப்பத்தில் சமுகம் தருவதற்கு விருப்பமுள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
06. கேள்விகள் 2022 செப்டெம்பர் 26ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
07. கிடைக்கப் பெற்றுள்ள கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது முழுமையற்றதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்விப் படிவங்களை நிராகரிக்கும் முழுமையான உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு,
ஊவா மாகாண கல்வி அமைச்சு,
ஊவா மாகாண சபை,
பதுளை.

திகதி: 2022-06-20.

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனு திறத்தலை பிற்போடுவதற்கான அறிவித்தல்

KOTHALAWALA VIADUCT of OCH இற்கு 300 எண்ணிக்கையான ELASTOMETRIC BRIDGE EXPANSION JOINTS களை வழங்கி விநியோகித்தல்

01. கீழ்க்காணுமாறு விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி பிற்போடப்படுவதாகவும் புதிய விலைமனு திறக்கப்படும் திகதி குறிப்பிடப்படுவதாகவும் சித்திகரமான விலைமனுதாரர்களுக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக்குழுவின் தலைவர் இப்போது அறிவிக்கிறார்.

ஒப்பந்த இல	ஒப்பந்தத்தின் பெயர்	திருத்தப்பட்ட விலைமனு திறக்கப்படும் திகதி
RDA/DPR/EOM&M/GOSL/ BREX/2022/16	KOTHALAWALA VIADUCT OF OCH இற்கு 300 எண்ணிக்கையான ELASTOMETRIC BRIDGE EXPANSION JOINTS PALLETS	28.06.2022

02. ஆவணங்களை வழங்குவதற்கான இறுதி திகதி 2022.06.27ம் பி.ப. 2.30 ஆக இருக்கும்
03. ரூபா - 850,000.00 பெறுமதியான 2022.10.25ஆம் திகதி வரை செல்லுபடியாகும் ஓர் விலைமனுப்பிணையை ஒவ்வோர் விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும்.
04. 2022.06.28ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன், பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்த, மகநெகும மஹமெதுர 1ஆம் மாடி, பொது அலுவலக பணிப்பாளருக்கு நகல்களுடனான விலைமனுக்கள் விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் சமுகமளிக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
05. விலைமனுக்கள் 2022.09.27 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
06. ஏனைய விதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி இருக்கும்

தலைவர்
வீதி அபிவிருத்தி அதிகார சபை பெறுகைக்குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை
1ஆம் மாடி, மகநெகும மஹமெதுர, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை

மானுடவியல்
(தொடர்)

காரைக்கால் அம்மையார்

76

இரண்டினுள் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து படைத்து, அவ்வடியாரைத் திருவமுது செய்வித்தார்.

அடியவர் சோற்றை மாங்கனியோடு உண்டு, புனிதவதியாருடைய செய்கையை உவந்து போயினார். பின், பரமதத்தன் பகலிலே வீட்டுக்கு வந்து உணவு உண்ணும் பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனியைக் கொண்டுவந்து, கலத்திலே வைத்தார். பரமதத்தன் மிக இனிய அந்தக்கனியை உண்டு அதன் இனிய சுவையினாலே திருத்தியடையாமல் மனைவியாரை நோக்கி, "மற்றக் கனியையுங் கொண்டுவந்து வை" என்றான்.

மாங்கனி பெறுதல்

புனிதவதியார் கொண்டு வரச் செல்பவர் போலப் போய் நின்று, கொண்டு, சோகித்து, தம்மை விசுவசிக்கின்ற மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்து உதவும் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே, அக்கடவுளுடைய கருணையினால், அதிமதுரமாகிய ஒருமாங்கனி அவர் கையில் வந்திருந்து விழுந்தது. அதைக் கொண்டுவந்து, கணவனுடைய கலத்திலே படைக்க அவன் அதை உண்டு, அதன் சுவை தேவாமிர்தத்தைப்பார்க்கிலுஞ் சிறந்தமையால் "இது முன் நான் தந்த மாங்கனியன்று இது மூவுலகங்களிலும் பெறுதற்கு அரியது, இதனை நீ எங்கே பெற்றாய்" என்றான். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

யோகினி ஏகாதசி விரதம்

அழகாபுரியின் மன்னன் குபேரன். இவன் தேவர்களின் கருவூலத்தைக் காப்பவன். தீவிர சிவபக்தன். நாள்தோறும் தவறாமல் சிவபூஜை செய்பவன். குபேரனின் பணியாளனின் பெயர் ஹேமமாலி. குபேரன் தினந்தோறும் செய்யும் சிவ பூஜைக்கான மலர்களை மானசரோவர் ஏரிக்குச் சென்று பறித்து வந்து கொடுக்கும் பணியைச் செய்து வந்தான்.

ஒருநாள் வழக்கம்போல குபேரனிடம், `மலர் பறித்து வருகிறேன்' என்று சொல்லிவிட்டு அழகாபுரியிலிருந்து புறப்பட்டான் ஹேமமாலி. ஆனால், அவன் உரிய நேரத்துக்குத் திரும்பவில்லை. குபேரனும் மலர்களுக்காக நெடுநேரம் காத்திருந்தான். மலர் இல்லாததால் குபேரனால் அன்றைய தினத்தில் சிவபூஜை செய்யமுடியவில்லை.

சிவ பூஜை தடைப்பட்டுவிட்டதால் கடுங்கோபம் கொண்ட குபேரன், காவலனை அனுப்பி ஹேமமாலியைத் தேடச் சொல்லிக் கட்டளையிட்டான். ஹேமமாலியைத் தேடிச்சென்ற காவலன் திரும்பி வந்து, ``சிவபூஜை செய்வதற்கு மலர்கள் பறித்துக்கொண்டுவருவதை மறந்து, ஹேமமாலி, அவன் மனைவியுடன் மகிழ்ந்திருக்கிறான். அவன் இப்போது திரும்பி வருபவனைப் போன்று தெரியவில்லை" என்று தெரிவித்தான்.

குபேரன் கடும் கோபங் கொண்டு, ``சிவபூஜைதடைப்படக் காரணமாக இருந்த ஹேமமாலியைத் தொழுநோய் தாக்கட்டும். அதனால், அவன் மனைவியை விட்டுப் பிரிவானாக..." என்று சாபமிட்டார்.

குபேரன் சாபமிட்ட அடுத்த கணம், தொழுநோயால் பீடிக்கப்பட்டான் ஹேமமாலி. உடனே அவன் தன் மனைவியைவிட்டுப் பிரிந்து காடுகளில் சுற்றித்திரியத் தொடங்கினான். அன்றாட உணவுக்கும் நீருக்குமே அவன் காடுகளில் அவதிப்பட்டான். நோய் மற்றவருக்கும் பரவிவிடும் என்று பயந்து அவனை யாரும் நெருங்கவில்லை.

அவன் துயரம் நீண்டுகொண்டேயிருந்தது. இந்தச் சூழலில்தான் ஒருநாள் வனத்தில் அவன் மார்க்கண்டேய முனிவரைக் கண்டான்.

தனது நோய் காரணமாகத் தொலைவிலிருந்தே அவரை வணங்கினான். அனைத்து உயிர்களிடமும் மாறாத அன்பு செலுத்தும் மார்க்கண்டேய முனிவர் அவன் நிலையைக் கண்டு வருந்தினார். ``நீ யார்? உனக்கு எவ்வாறு இது நிகழ்ந்தது?" என்று கேட்டார்.

அதற்கு ஹேமமாலி, எதையும் மறைக்காமல் நடந்ததைக் கூறினான். அதைக் கேட்ட மார்க்கண்டேய முனிவர், ``உன் மனைவியின்மீது கொண்ட அன்பு தவறில்லை. ஆனால், உன் கடமை தவறியதால்தான் நீ இப்படித் துயரத்தை அனுபவிக்கிறாய். நோய்களால் ஏற்படும் துன்பங்களைப் போக்கும் விரதம் ஒன்று உண்டு. அதை நான் உனக்கு உபதேசிக்கிறேன்" என்றார்.

உடனே ஹேமமாலியும் , "என் மீது கருணை கொண்டு நீங்கள் உபதேசிக்கும் விரதத்தை நிச்சயம் பின்பற்றுவேன்" என்று சொன்னான். முனிவரும் ஹேமமாலிக்கு ' யோகினி ஏகாதசி ' விரதத்தின் மகிமையை எடுத்துச் சொல்லி அதைக் கடைப்பிடிக்குமாறு உபதேசித்தார்.

முனிவரின் வாக்கைத் தெய்வவாக்காக நம்பிய ஹேமமாலி, யோகினி ஏகாதசி நாளில் விரதமிருந்து தன் நோய் நீங்கப் பெற்றான். தன் அழகிய தோற்றத்தையும் திரும்பப் பெற்றான். மீண்டும் அழகாபுரிக்குச் சென்று தன் மனைவியுடன் இல்லற வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் தொடர்ந்தான்.

நம்பிக்கையுடன் விரதமிருந்து, திருமாலை வழிபட்டால் பாவச் சுமைகளிலிருந்து விடுபடுவது மட்டுமல்லாமல், நோய்களிலிருந்தும் விடுபடலாம் என்பதையே ஹேமமாலியின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. யோகினி ஏகாதசி அன்று நாள் முழுவதும் துளசி தீர்த்தம் மட்டும் அருந்தி மகாவிஷ்ணுவை வழிபட அனைத்து நற்பலன்களையும் அடைவதோடு தீராத நோய்களிலிருந்தும் விடுபடலாம் என்பது நம்பிக்கை.

சைவ மஞ்சரி

இரட்டைச் சிறப்புகள் கொண்ட வேல்

முருகனது ஆயுதங்களில் அவர் கையில் வைத்திருக்கும் வேல் சிறப்பாக போற்றப்படுகிறது. வேல்வல்லான் என்று கலித் தொகையும் வல்வேல் கந்தன் என்று புறநானூறும் முருகனை புகழ்கின்றன. முருகனது ஆயுதங்களில் அவர் கையில் வைத்திருக்கும் வேல் சிறப்பாக போற்றப்படுகிறது. வேல்வல்லான் என்று கலித் தொகையும் வல்வேல் கந்தன் என்று புறநானூறும் முருகனை புகழ்கின்றன. முருகனுக்கு வேலை அருளியவர் சிவபெருமான். அந்த வேலுக்குச் சக்தியை அளித்தவர் பராசக்தி. இதனால் இரட்டைச் சிறப்புகள் வேலுக்குக் கிடைக்கின்றன. பராசக்தியிடம் முருகன் வேல் வாங்கும் ஐதீகம், சிக்கலில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கு ஐப்பசி மாதம் மகா கந்தசஷ்டி திருவிழாவின் ஐந்தாம் நாள், சிக்கல் சிங்கார வேலர், அன்னை பராசக்தி வேல் நெடுங்கண்ணியின் சன்னதிக்குச் சென்று வேலைப் பெறுகின்றார்.வேல் வாங்குதல் சிக்கலிலும், சூரசம்ஹாரம் திருச்செந்தூரிலும் உச்சநிலைச் சிறப்புகளுடன் நடைபெறுகின்ற காரணத்தினால், சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்ஹாரம் என்ற பழமொழி தோன்றியது. முருகனது வேல் மகிமையுடையது. மேன்மையானது. தலைமையானது, தெய்வீகத் தன்மையுடையது. எனவே, இது சிறப்பான வழிபாட்டிற்குரியது. பண்டை காலத்தில் தனிக்கோட்டம் அமைத்து முருகனது வேலை வழிபட்டனர். இதற்கு வேல் கோட்டம் என்று பெயர். முருகனின் ஆறாம்படை வீடான சோலையில் இன்றும் வேல்தான் மூலவராக உள்ளது. ஆதி காலத்தில் இந்த ஊர் வேல்கோட்டம் என்று அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. வீடுகளில் செம்பாலும், பொன்னாலும், ஐம்பொன்னாலும் வெள்ளியாலும் வேல்களைச் செய்து போற்றி வழிபடுகின்றனர். இந்த வேல்களின் உயரம் ஆறங்கு லத்திற்குள் இருக்க வேண்டும். வேலைத்தனியாகவும் வழிபடலாம். அல்லது பீடத்தில் எழுந்தருளச் செய்தும், திருவாசி அமைத்தும் வழிபடலாம். சிலர் வேலின் நடுவில் சிவப்புக் கல்லைப் பதிக்கின்றனர். இப்படி பதிப்பது மிக நல்லது. முருகனை வழிபடுவதைப் போலவே வேலையும் வழிபட வேண்டும். சிலர் பரம்பரை பரம்பரையாக ஒரே வேலை பாதுகாத்து வழிபட்டு பக்திப் பெருமிதம் கொள்கின்றனர். வேலைத் தினமும் வழிபடுவது நல்லது. குறிப்பாக செவ்வாய்க்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் வேலை நிச்சயம் வழிபட வேண்டும். மேலும், கிருத்திகை பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் முதல் முருகனுக்குரிய நாட்களில் வேல் வழிபாடு மிக அவசியம் ஆகும்.

அறநெறி அறிவுநோடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19127) அழகிற் சிறந்த கோயில்கள் எத்தனை? ஐந்து
(19128) அந்த ஐந்து சிறந்த கோயில்களும் எவை? திருவாரூர், திருஇடைமருதூர், திருவிரிஞ்சை, வேதாரண்யம், திருக்குடந்தை, காஞ்சி
(19129) திருவாரூர் கோயிலின் எது அழகு? தேரழகு
(19130) திருஇடை மருதூர் கோயிலின் எது அழகு? வீதி அழகு
(19131)திருவிரிஞ்சை கோயிலின் எது அழகு? மதிலழகு
(19132) திருக்குடந்தை கோயிலின் எது அழகு? கோபுரமழகு
(19133) காஞ்சி கோயிலின் எது அழகு? கோயிலழகு
(19134) சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தலங்கள் எத்தனை? 44
(19135) சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலங்கள் எத்தனை? 52
(19136) சம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலங்கள் எத்தனை? 13
(19137) அப்பரும், சுந்தரரும் பாடிய தலங்கள் எத்தனை? 02
(19138) சம்பந்தர் மட்டும் பாடிய தலங்கள் எத்தனை? 111
(19139) அப்பர் மட்டும் பாடிய தலங்கள் எத்தனை? 28
(19140) சுந்தரர் மட்டும் பாடிய தலங்கள் எத்தனை? 25
(19141) மாணிக்கவாசகர் பாடிய தலங்கள் எத்தனை? 25

நாதப் பிரம்ம யோகம் - 24

இசை மாத்திரமே எல்லாப் பொருட்களிலும் பிராணனை செலுத்தும் வல்லமையுள்ளது. அதனால் இசையினை அனைத்து மன, உடல் வியாதிகளுக்கும் சிகிச்சையாக பயன்படுத்த முடியும். இன்றைய சமூகத்தின் உண்மையான இசையினை சாஸ்திரீய சங்கீதத்தினை காண்பதுஅ ரிதாகி விட்ட து. செயற்கையான தாளக்கட்டினை உட்புகுத்தி ராக், பொப் போன்ற இசை வடிவங்கள் இந்திய இசையில் கலப்படம் செய்யப்படுகின்றன. இசை என்ற பெயரில் பலவிதமான இரைச்சல்களைப் புகுத்தி அதன் உண்மையான தெய்வீக வடிவம் அற்றுப் போகச் செய்கிறார்கள்.

பாரம்பரிய இசையில் தூய முறையில் தேர்ச்சி பெற்ற ஆசியுடைய விழிப்படைந்த ஆன்மாக்கள் இயற்கையில் ஜடத்திற்கும், சைதன்யத்திற்கும் இடையில் உள்ள தொடர்பினை விளக்கி இசையின் இந்த உயர்ந்த தன்மையினை பாமரர்களும் புரிந்து கொள்ள முன் வர வேண்டும். வாய்ப்பாட்டின் முக்கிய அமிசம் லயம்,தாளம் ஆகிய இரண்டுமாகும். இந்த இரண்டும் வாய்ப்பாட்டின் மூலம் பிராணன் நுண்மையாக பிரவாகிப்பதற்கு அவசியமான ஒன்றாகும். இசையினை தகுந்த வாய்ப்பாட்டின் மூலமாகவோ இசைக் கருவிகளூடாகவோ தகுந்த ஒழுங்குபடுத்தப்பட்ட ஸ்வரங்களை அமைப்பதன் மூலம் உருவாக்க முடியும். வாய்ப்பாட்டும், இசைக் கருவிகளும் ஒன்றை ஒன்று அழகுபடுத்தி இசையினைத் தருவன. இப்படி உருவாக்கப்படும் இசையுடன் இசைக் கலைஞரின், பாடகரின் உணர்ச்சியும் கலக்கப்படுமாக இருந்தால் அது மிகப் பெரிய மின்சாரமாக செயற்பட்டு கேட்பவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தினை, உணர்ச்சி மாற்றத்தினை ஏற்படுத்தும்.

எல்லா விதமான உணர்ச்சிகளும் காமம், உத்வேகம், பக்தி, இத்தகைய உணர்ச்சிகள் அனைத்தும் கேட்பவர்களுக்கு இலகுவாக இசை மூலம் உருவாக்க முடியும். தூய, இயற்கையுடன் இயைந்த, பக்தி இசை ஒருவனை தாழ்மையான உணர்ச்சிகளிலிருந்து தெய்வீகத் தன்மை உடையவனாக ஆக்கும். காம, மனதிற்கு துள்ளல் குதிப்பு, செயற்கையான இசைகள் மறுதலையாக ஒருவனது உணர்வினை தாழ் உணர்ச்சிகளுக்கு கொண்டு செல்லும்.

ஸ்வரங்களை ஒரு ஒழுங்கில் கட்டமைப்பது இசைக்கு உயர்வினைத் தரும். ஸ்வரங்களை உயர்த்தி தாழ்த்தி நாதத்தினை உருவாக்காமல் இசையினை உருவாக்க முடியாது. இசையின் தோற்றம் என்பதே நாதத்தின் வேறுபாடே, இந்த எல்லையற்ற மூல நாத சக்தி தொடர்ச்சியாக அதிர்ந்து இசை தொடர்ச்சியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பறவைகளின் இசை எப்படி இயற்கையில் வெளிப்படுகிறதோ அப்படி இயற்கை எங்கும் நாதம் இசையாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த இயற்கையில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நாத சக்தியினையே சாஸ்திரங்கள் நாதப் பிரம்மம் என்று கூறுகின்றன.

(தொடரும்)

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

பிரதோஷம்

ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதோஷ வேளை சந்திரன் மற்றும் சனியின் ஓரையில் அமையும். இந்நாளில் செய்யக்கூடிய பிரதோஷ பூஜையினால் நமக்கு சனி பகவானின் அனுக்கிரமும் சூரியபகவானின் அருளும் கிடைக்கும். பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பவர்கள் கட்டாயம் வழிபட வேண்டிய பிரதோஷம் ஞாயிறு பிரதோஷம்.

வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வைகாசி விசாக ரதோத்ஸவப் பெரு விழா ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் உற்சவ மூர்த்தி வெளிவீதி உலா வருவதையும் வசந்த மண்டபம் விஷேட பூஜைகள் நடைபெற்று வீதி உலா வருவதையும் காணலாம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.